அருள்வாக்கு அறிவோம் - 22

புதிய ஏற்பாடு - பாகம் II - எண் 2

துவக்கத் திருச்சபை: ஒரு கண்ணோட்டம்

தயாரிப்பு:

புனித சின்னப்பர் விவிலிய நிலையம்
பூந்தமல்லி, சென்னை-600056

வெளியீடு:

தமிழ்நாடு விவிலியம் மறைக்கல்வி திருவழிபாட்டு நடுநிலையம்,
திண்டிவனம்-604 002

1991

(For Private Circulation only)

துவக்கத் திருச்சபை: ஒரு கண்ணோட்டம்

ஆக்கியோன்: அருள்திரு. வி. இரபேல்

பொருளடக்கம்

I முன்னுரை

II விவிலியம் கூறும் திருச்சபை

1. பழைய ஏற்பாட்டில் எக்ளேஸியா
2. புதிய ஏற்பாட்டில் எக்ளேசியா
3. வேறு சொற்களும் கருத்துக்களும்
4. முடிவுரை

III திருச்சபையின் வாழ்வு

1. திருச்சபையின் பரப்பு
2. தூய ஆவியானவரின் காலம்
3. மத வாழ்வு
4. உலகியல் வாழ்வு
5. திருச்சபையும் சமுதாயமும்
6. திருச்சபையும் அரசும்

IV திருச்சபையின் அமைப்பு

1. அப்போஸ்தலர்கள்
2. திருத்தொண்டர்
3. பெண் திருத்தொண்டர்?
4. மூப்பர்கள்
5. ஆயர்கள்
6. திருப்பணியாளர் நியமனம்
7. திருப்பட்டமளிப்பு
8. முடிவுரை

V துவக்கத் திருச்சபை வரலாறு

1. அப்போஸ்தலர் காலம் (30-100)
2. உப அப்போஸ்தலர் காலம் (100-150)
3. உரோமைப் பேரரசுடன் மோதல் மற்றும் தப்பறைக் கொள்கைகள் (150-313)
4. அரச திருச்சபையின் உதயமும் வளர்ச்சியும் (313-590)
5. முடிவுரை

1

துவக்கத் திருச்சபை: ஒரு கண்ணோட்டம்

முன்னுரை

புதிய ஏற்பாட்டின் நூல்களைச் சரிவரப் புரிந்துகொள்ள அவை எழுந்த பின்னணியைப் புரிந்துகொள்வதோடு துவக்கக் காலத் திருச்சபை வரலாற்றையும் ஓரளவு அறிந்துகொள்வது சாலச்சிறந்தது. புதியஏற்பாட்டு நூல்கள் எழுமுன்னே திருச்சபை உதயமாயிற்று. உண்மையில் திருச்சபையில்தான் அந்நூல்கள் உதயமாயின. திருச்சபையின் விசுவாசம் மற்றும் அமைப்பின் வெளிப்பாடாக அவை உருவாயின. துவக்கத் திருச்சபையின் நெருக்கடிகள், நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள் பல கிறிஸ்துவின் காலத்துக்கு ஏற்றிச் சொல்லப் பட்டுள்ளன என்றால் மிகையாகாது. முக்கியமாக அப்போஸ்தலர் பணி துவக்ககாலத் திருச்சபையின் பல்வேறு அமைப்புக்களையும் நெருக்கடிகளையும் வளர்ச்சியையும் படம் பிடித்துக் காட்டுகிறது.

இந்த நூலில் துவக்கத் திருச்சபையின் நிலை ஓரளவுக்கு அலசப்படுகிறது.

இரண்டாம் அதிகாரத்தில் பொதுவாக விவியத்தில் திருச்சபை பற்றி என்ன கூறப்பட்டுள்ளது என்பது சொல்லப்படுகிறது. பல்வேறு உருவகங்களை விவிலியம் பயன்படுத்துகிறது.

மூன்றாம் அதிகாரத்தில் திருச்சபையின் துவக்ககால வாழ்வு வருணிக்கப்படுகிறது. யூதக் கிறிஸ்தவர், புறவினத்துக் கிறிஸ்தவர் சிக்கல்கள், திருச்சபைக்கும் அரசுக்கும் சமுதாயத்துக்கும் இடையேயான உறவுகள் சித்திரிக்கப்பட்டுள்ளன. இது பெரும்பாலும் முதல் நூற்றாண்டு நிலையாகும்.

நான்காம் அதிகாரம் துவக்கத் திருச்சபையின் அமைப்பு முறை பற்றிக் கூறுகிறது. அப்போஸ்தலர், மூப்பர், திருத்தொண்டர், ஆயர் என்னும் பணியாளர் இவ்வமைப்பில் இருந்தனர். ஆயினும் இவர்களின்

பணி புதிய ஏற்பாட்டில் தெளிவாக வரையறுக்கப்படவில்லை. மற்ற பிற்கால இலக்கியங்கள் வழிநின்று இவர்கள் பணிபற்றி அதிகம் அறிகின்றோம்.

இறுதி அதிகாரத்தில் துவக்கத் திருச்சபை பற்றிய சுருக்கமான வரலாறு அப்போஸ்தலர் காலத்திலிருந்து 6-ஆம் நூற்றாண்டு வரையிலான காலம்வரை தரப்பட்டுள்ளது. பயணத் திருச்சபையாக இருந்தது எப்படி அரச திருச்சபையாக மாறியது என்பதும் அதன் நன்மை தீமைகளும், துவக்ககால கொள்கை வகுத்தல்கள், தப்பறை கொள்கைகளுக்கு எதிரான வாதங்கள் யாவும் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

இவை யாவும் துவக்கத் திருச்சபையினைப் பற்றி ஒரு சிறு கண்ணோட்டத்தை விமர்சன நோக்கோடு நமக்குத் தருகின்றன.

விவிலியம் தூய ஆவியால் ஏவப்பட்டது. ஆனால் அது திருச்சபையில்தான் அங்கீகரிக்கப்பட்டது. அந்தத் திருச்சபைதான் விவிலியத்திற்கு விளக்கமும் அளிக்கிறது. அது அளிக்கும் விளக்கம் அதன் வரலாற்றுச் சூழலைப் பொறுத்தே அமைகிறது. எனவேதான் துவக்கத் திருச்சபையின் வரலாறு பற்றிய இச்சிறு தொகுப்பு வெளியிடப்படுகின்றது.

2

விவிலியம் காணும் திருச்சபை

'எக்ளேஸியா' என்ற கிரேக்க பதம் திருச்சபையைக் குறிப்பதாகும். இது இறைமக்கள் கூட்டத்தைக் குறிக்கும் சொல்லாகும்.

1. பழைய ஏற்பாட்டில் எக்ளேஸியா

எபிரேய மொழியில் 'காஹால்' என்ற சொல் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பாகிய 'செப்துவஜிந்த்' எனும் கிரேக்க நூலில் 'எக்ளேஸியா' என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இரண்டு சொற்களுக்கும் கூட்டம் என்பதே அடிப்படைப் பொருள். மக்கள் ஒன்றாகப் பாடுவதோ, அல்லது ஏதாவது ஒரு நோக்கத்திற்காகக் கூட்டிச் சேர்க்கப்படுவதே இதில் குறிக்கப்படுகிறது. இது பழைய ஏற்பாட்டில் போர் செய்தல் முதலியவற்றிற்கான அழைப்பாக இருந்தாலும் (ஆதி. 49:6; எண். 22:4; எசேக். 16:40) முக்கியமாக ஆண்டவர் சீனாய் மலையில் செய்த உடன்படிக்கையில் பங்கு கொண்ட கூட்டத்தையே குறிப்பிட்டது.

2. புதிய ஏற்பாட்டில் 'எக்ளேஸியா'

புதிய ஏற்பாட்டில் இச்சொல் 112 முறை வருகிறது. அதில் 90 சதவிகிதமும் சின்னப்பர் கடிதங்களிலும் அப்.பணியிலும், திருவெளிப்பாட்டிலும் வருகின்றது. புதிய ஏற்பாட்டில் இது பல அம்சங்களைக் கொண்டுள்ளது.

அ. ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக அழைக்கப்பட்ட கூட்டம்

இந்த நோக்கம் மத நோக்கமாக இருக்கலாம். அல்லது பொது நோக்கமாக இருக்கலாம். இது வழக்கமான கூட்டமாக இருக்கலாம் (அப்.பணி. 19:39) அல்லது முன்னேற்பாடின்றி திடிரென நடப்பதாக இருக்கலாம் (19:32, 40). புதிய

ஏற்பாட்டில் 'எக்ளேஸியா' என்ற சொல், குறிப்பிட்ட கூட்டம், செபம், அறிவுரை, முதலானவற்றிற்குக் கூடுவது குறித்து பயன்படுத்தப்பட்டுள்ளது (அப்.பணி. 11:26; 12:5; 1 கொரி. 11:18; 14: 4-5, 19, 28, 34-35; கொலோ. 4:16.)

ஆ. ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து

கூட்டப்பட்ட கூட்டம்

ஒரு வீட்டிலிருந்தோ (உரோ. 16:5; கொலோ. 4:15) ஒரு நகரிலிருந்தோ (எருசலேம்-அப். பணி. 8:1; 11:22, கொரிந்து 1 கொ 1:2; 2 கொரி 1:1, தெசலோனிக்கே-1தெச. 1:1, எபேசு திருவெளி. 2:1), ஒரு மாநிலத்திலிருந்தோ (கலாத்தியா-கலா 1:2, யூதேயா-கலா. 1:22; 1 தெச. 2:14; மக்கதோனியா 2 கொரி 8:1; ஆசியா- 1 கொரி. 10:19) அழைக்கப்பட்டிருக்கலாம். சில நேரங்களில் ஒரு குறிப்பிட்ட இனத்தவரைக் குறிப்பதாயிருக்கும். (உ.ம் புறவினத்துத் திருச்சபைகள்- உரோ. 10:4).

இ கிறிஸ்து வழியாய் கடவுளால்

சேர்க்கப்பட்ட கூட்டம்

கடவுளால் கூட்டப்பட்ட கூட்டம் திருச்சபை என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. 'The Ecclesia of God' (அப்.பணி.20:28 1 கொரி 1:2; 10:32; 11:16,22; 15:9; 2 கொரி. 1:1 கலா. 1:13; 1 தெச 2:14; 2 தெச. 1:4; 1 தீமோ. 3:15). கடவுளே திருச்சபைகளைக் கூட்டிச் சேர்க்கிறார், அதில் வாழ்கிறார், அதை ஆள்கிறார், தமது நோக்கத்தை அதன் மூலம் செயல்படுதுகிறார்.

சில நேரங்களில் எக்ளேசியா என்பது 'கிறிஸ்துவின் திருச்சபைகள்' என்ற பொருளிலும் பயன்படுத்தப்படுகிறது (உரோ 16:16; கலா 1:22).

மற்ற இடங்களில் இது தெளிவுறச் சொல்லப்படாவிடினும் கிறிஸ்துவில் கடவுள் திருச்சபையின் வல்லமையாய் உள்ளார்.

ஈ) 'எக்ளேஸியா' என்பது இறுதிக்கால

இறைமக்கள் கூட்டம்

திருச்சபையின் உயிருள்ள அடிப்படை இஸ்ராயேலுக்கு வாக்களிக்கப்பட்ட மெசியா. அந்த மெசியா இப்போது தமது மக்களைக் கூட்டிச்சேர்க்கின்றார். எனவே, 'எக்ளேஸியா' என்

பது இறுதிக்கால நிறைவைக் குறிக்கிறது. புதிய ஏற்பாட்டில் 'எக்ளேஸியா' இறுதிக்கால இறைமக்கள் கூட்டத்தைச் சுட்டு கிறது. மெசியா துவக்கி வைக்கும் புதிய யுகத்தில் பங்குகொள்ள அவருடைய மீட்பளிக்கும் செயலால் பல நாடுகளிலிருந்தும் கூட்டிச்சேர்க்கப்படும் கூட்டமாகும். இது எல்லா தலைமுறை களையும், எல்லா இடங்களையும் உள்ளடக்கியது. எல்லா உடன்படிக்கைகளையும் நிறைவாக்குவது.

3. வேறு சொற்களும் கருத்துக்களும்

திருச்சபை என்பதை எக்ளேசியா என்ற சொல் குறித்தா லும் நூற்றுக்கும் மேற்பட்ட வேறு சொல்லமைப்புக்கள் திருச்ச பையைச் சுட்டுபவையாக உள்ளன. அவற்றைப் பொதுவாகப் பத்துப் பிரிவுகளாய்ப் பிரிக்கலாம்.

1) புனிதராயிருக்கும்படி அழைக்கப்பட்டவர்கள்

'எக்ளேஸியா' என்பது கடவுளால் அழைக்கப்பட்டு, தெரிந்து கொள்ளப்பட்டு, கூட்டிச் சேர்க்கப்பட்டு, முன்னரே அறியப் பட்டு, ஒப்புரவாக்கப்பட்டு, மகிமைப்படுத்தப்பட்டு, புனிதப்படுத் தப்பட்ட கூட்டத்தைக் குறிக்கும். இவர்கள் புனிதராயிருக்கும்படி அழைக்கப்பட்டவர்கள் என புனித சின்னப்பர் கூறுகிறார் (1கொரி. 1:2). இக்கருத்து புதிய ஏற்பாட்டில் வேறு இடங்களி லும் காணக்கிடக்கிறது (1 அரு 17:17-19; அப்.பணி 9: 31-32; உரோ 15. 16-31; 1கொரி 14:33; 2கொரி 1:1; எபேசியர் 2:19; 5:26; எபேசியர் 13:12; 1 இரா 2:5-9; திருவெளி 20.9).

இவர்கள் ஞானஸ்நானத்தில் பரிசுத்த ஆவியைப் பெற்றவர் கள். எனவே இவர்கள் புனிதராக்கப்படுதலில் பரிசுத்த ஆவியின் பங்கு இருக்கிறது.

புனிதராக்கப்படுதல் என்பது கிறிஸ்துவில் பங்கெடுத்தலே. ஏனெனில் எபி. 2:11-ல் பரிசுத்தமாக்குபவர் பரிசுத்தமாக்கப்படு பவர்கள் அனைவருக்கும் உயிர் முதல் ஒன்றே (எபி. 2:11).

2) விசுவாசிகளின் கூட்டம்

'எக்ளேஸியா' என்பதைக் கிறிஸ்து வழியாக கடவுள் புரியும் செயல்களுக்கு மனிதன் அளிக்கும் பதில் என்ற கோணத் திலிருந்தும் பொருள் கொள்ளலாம். கடவுள் மனிதர்களை அழைக்கிறார். பதிலுக்கு இவர்களும் கடவுள் பெயரை அழைக் கின்றார்கள். இவ்வாறு அழைப்பவர்களே எக்ளேஸியா ஆகி றார்கள் (1 கொரி 1:2). கிறிஸ்து தம்மைப் பின்பற்றுவதற்கும்,

தம்மோடு இருப்பதற்கும், தம்மால் அனுப்பப்படுவதற்கும் (மாற்கு 3:14; 6:7) மனிதரை அழைக்கிறார். அந்த அழைப்பிற்குச் செவிமடுப்பவர்கள் 'எக்ளேஸியா'வாகின்றனர். இதன் காரணமாய் சீடர் என்ற பொருளைத் தரும் 'மதேத்தாய்' என்ற கிரேக்கச் சொல்லும், பின்பற்றுவோர் என்ற பொருளைத் தரும் 'ஹோய அக்கெது தெந்தெஸ்' என்ற சொல்லும் 'எக்ளேஸியா' என்ற சொல்லுக்கு இணையான சொற்களாய் ஆகிவிடுகின்றன (மத் 28:19; அரு 10:4; அப்.பணி 11:26; 14:22 28; 18:23; திருவெளி 14:4).

திருச்சபை என்பது விசுவாசிகளின் கூட்டம் மட்டும். (ஹோய் பிஸ்தெயூந்தெஸ்). இங்கும் 'ஹோ பிஸ்தோஸ்' என்னும் சொல் (விசுவாசி) கடவுளுக்குக் கூறப்பட்டுள்ளது (1 கொரி 1:9; 10:13; 2 கொரி 1:18; 1தெச 5:24; 2 தெச 3:3; எபி 10:23 1 இரா 4:19); கிறிஸ்துவுக்குக் கூறப்பட்டுள்ளது (2 தீமோ 2:13 எபி 2:17; 3:2; 1 அரு 1:9; திருவெளி 1:5; 3:14; 19:11); தனிப்பட்ட விசுவாசிகளுக்குச் சொல்லப்பட்டுள்ளது. (அப்.பணி 16:1, 15; திருவெளி 2:13; விசுவாசிகளின் கூட்டத்திற்கும் சொல்லப்பட்டுள்ளது (அரு 1:12) 3:15; 5:24; 17:20-21; அப்.பணி 2:44 4:4, 32; 5:14; 10:45; 14:23; உரோ 3:22; 1 கொரி 14:22; எபே 1:1; கொலோ 1:2; எபி 4:3; 1 இரா 2:7).

புதிய ஏற்பாட்டில் மொத்தம் 15 புத்தகங்களில் 75 பகுதிகளில் திருச்சபை என்பது விசுவாசிகளின் கூட்டம் என்பது காணக்கிடக்கிறது.

3) அடியார், ஊழியர்

அடிமை மற்றும் ஊழியர் என்ற பதங்கள் திருச்சபை உறுப்பினர்களுக்குப் பொருந்துகிறது. 'டூலோய்' என்ற சொல் அடிமையைக் குறிப்பதாகும். நாம் விசுவாசம் காட்டவேண்டிய தலைவர் கிறிஸ்துவழியாய்த் தம்மை வெளிப்படுத்திய கடவுள் அந்தக் கிறிஸ்து தலைவராகவும் அதே நேரம் அடிமையாகவும் 'எஜமானாகவும்' அதே நேரம் ஊழியராகவும் சித்திரிக்கப்பட்டுள்ளார். கிறிஸ்து ஓர் அடிமையாக மாறியதால் (பிலிப் 2:7) அவரைச் சார்ந்தவர்களும் ஒருவர் மற்றவர் இதே அடிமையாகின்றார் (2 கொரி 4:5; கலா 5:13). திருச்சபையின் அடிமை உருவகம் 50 பகுதிகளில் விவிலியத்தில் காணக்கிடக்கிறது. ஒவ்வொரு விசுவாசியும் கடவுளின் மற்றும் கிறிஸ்துவின் அடியார் என்பது 1 தெச 1:9; உரோ 6:18, 22 ஆகிய பகுதிகளில் காணக்கிடக்கிறது. இது கிறிஸ்துவின் போதனையின் அடிப்படையில்

அமைந்ததுதான் (காண் மத் 6:24; 10:24; 20:27; மாற்கு 10: 44; லூக் 17:10; அரு 13:16). தலைவன் ஊழியன் பற்றி இயேசு சொன்ன உவமைகள் தங்களுக்குப் பொருந்தும் என துவக்க காலக் கிறிஸ்துவர்கள் எண்ணினர். மத் 13:18; 22-14; மாற்கு 12; லூக் 14; 15;20).

இதன் காரணமாய் புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் தங்களைக் கடவுளின் மற்றும் கிறிஸ்துவின் ஊழியர் என்று அழைப்பது வழக்கமாயுள்ளது (தீத்து 1:1); உரோ 1:1; பிலி 1:1; யாக 1:1; II pt 1:1; யூதா 1:1; திருவெளி 1:1) இது மட்டுமன்றி திருச்சபை உறுப்பினர்களை இறைவன் அடியார்கள் என்றும் அவர்களை அழைத்தார் (அப்.பணி. 2:8; 4:29; உரோ 6;22; 1 தெச 1:9; I pt 2:16: திருவெளி 7:3; 11:18).

ஆனால் இப்படி அடியாராக இருப்பது பய உணர்விலல்ல மாறாக கிறிஸ்துவின் வழி நின்று துன்பம், தியாகம் ஆகியவற்றால் பங்கெடுப்பதாகும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர் (மத் 10:20, மாற்கு 10:44-45; அரு 13:16; 15:20). கிறிஸ்துவின் ஊழியராய் அல்லது அடியாராய் இருத்தல் அவர்களுக்குச் சாட்சிகளாய் இருப்பதாகும்.

அவருக்கு அடியாராய் இருத்தல் அவரின் நற்செய்தியையும் அவரின் அரசையும் பரப்புதலாகும் (அப்.பணி 2:18; 4:29; 16:17; திருவெளி 1:1; 22:6).

4) இறைமக்கள்

கிறிஸ்துவ 'எக்ளேஸியா' புதிய ஏற்பாடு முழுவதும் இறைமக்கள் கூட்டம் எனக் கருதப்படுவது. எனவே, பல வகையிலும் அது உடன்படிக்கை மக்களின் தொடர்ச்சியாகவும் நிறைவாகவும் இலங்குவது.

புதிய ஏற்பாட்டில் வரும் எக்ளேஸியா என்ற சொல் எழுபதின்மை நூலில் பழைய ஏற்பாட்டு இறைமக்களுக்குப் பயன்படுத்தப்பட்ட உருவகங்களையே குறிக்கின்றது (கலா 6:16). கடவுளும் இஸ்ராயேலின் கடவுளாகவே அழைக்கப்படுகிறார் (மத் 2:6; லூக் 1:84; 68; 2:32; அப்.பணி 13:17; உரோ 11:1). புதிய உடன்படிக்கை இஸ்ராயேலின் வீட்டாரோடு செய்யப்பட்டுள்ளது (எபி 8:8-10). புறவினத்தாரும் இதில் சேர்க்கப்பட்டுள்ளனர் (உரோ 11:17; எபே 2:12). குலமுதுவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட வாக்கு நிறைவேறும்படி இயேசு அனுப்பப்பட்டுள்ளார் (மத் 2:6; 15:24; லூக் 1:68; 2:32; 24:21). இதன்

காரணமாய் திருச்சபை என்பது இஸ்ராயேலின் பன்னிரு கோத்திரங்கள் என்றே அழைக்கப்படலாம் (மத் 19:28; லூக் 22:30 யாக 1:1; திருவெளி 7:4; 21:12).

'ஹோ லாவோஸ் தூ தேயு' எனும் பதம் புதிய ஏற்பாட்டில் இங்ஙனம் விசுவாசிகளை இறைமக்கள் கூட்டமாகக் கருதுகிறது.

5) அரசு, மற்றும் கோயில்

அரசு, கோயில் என்பவை இஸ்ராயேலர் வாழ்வில் நடு நாயகமான அமைப்புகளாகும். அவை திருச்சபைக்கும் சொல்லப்படுகின்றன. விசுவாசிகள் அரசர்களாகவும், குருக்களாகவும் புதிய ஏற்பாட்டில் வருணிக்கப்படுகின்றனர் (திருவெளி 1:6; 5:10). அவர்களின் சமுதாயம் பரிசுத்த குலமாய் அரசகுருத்துவக் கூட்டமாய் உள்ளது. "நீங்களோ தேர்ந்தெடுக்கப்பட்ட இனம், அரச குருத்துவத் திருக்கூட்டம், பரிசுத்த குலம் இறைவனுக்குச் சொந்தமான மக்கள் (1 இரா 2:9).

திருச்சபை என்பது இறைமக்களின் அரசில் சேர்க்கப்பட்டவர்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது (கொலோ 1:13). திருச்சபை அரசின் திறவுகோலைப் பெறுகிறது (மத். 16:18-19; 18:16ff). விசுவாசிகள் அரசின் மக்களும் வாரிசுகளுமாய் உள்ளனர் (மத். 5:3,10; 5:19; 8:12;10:18:1,4; யாக. 2:5).

இஸ்ராயேலின் அரசின் தலைமையகம் எருசலேமாகும். இது திருச்சபைக்கும் உருவகமாயிற்று (எபி. 12; திருவெளி. 2-3; 21-22).

எருசலேமின் நடுநாயகம் தேவாலயம். எருசலேமைப் புனித நகரமாக ஆக்கியதே தேவாலயம்தான். எனவே, துவக்கத் கிறிஸ்தவர்கள் தாங்கள் சமூகத்தைப் புதிய எருசலேமாகக் கருதியபட்சத்தில் அதை ஆலயமாகவும் கண்டனர். ஆனால் அவர்கள் வெறும் கட்டடத்தை மனதில் கொண்டார்கள் என்று பொருளல்ல. கடவுள் கையால் கட்டப்பட்ட ஆலயத்தில் வசிப்பதில்லை (அப். பணி. 17:24) என்பதை உணர்ந்தே இருந்தனர். மாறாக கடவுள் தம் மக்களை ஒரு கோயிலாய் நிர்மாணிக்கிறார் என்றும் தம் மக்களோடு குடிகொள்கிறார் என்றும் உணர்ந்திருந்தனர்.

"உயிருள்ள கடவுளின் கோயில் நாம்தாம்; இதைக் கடவுளே சொல்கிறார்:

''அவர்களிடையே குடிகொள்வேன்;
அவர்கள் நடுவில் நடமாடுவேன்
அவர்களுக்கு நான் கடவுளாய் இருப்பேன்

(2 கொரி. 6:16)

இயேசுவின் உடல் ஆலயம் என அழைக்கப்பட்டது (அரு. 2:19-21). எனவே அகில திருச்சபையையும் கூட இந்தப் மறைபொருளில் ஆலயம் என அழைக்கப்படுகிறது (எபே. 2:21, திருவெளி 21) 1; கொரி. 3:16-17). திருச்சபை என்பது தந்தை மகன் தூய ஆவியின் பிரசன்னத்தால் ஆலயமாகிறது (அரு. 1:14; 1 கொரி. 3:16; 6:19; 2 கொரி. 6:16; திருவெளி. 7:15).

கடவுளின் பிரசன்னம் இந்த ஆலயத்தை உருவாக்குவதால் இயேசுவே இதன் மூலைக்கல்லும் தலைமைக் குருவுமாக உள்ளார். விசுவாசிகளும் இந்த ஆலயத்தின் உயிருள்ள கற்களாகவும் குருக்களாகவும் உள்ளனர். இராயப்பர் முதல் திருமுகத்தில் திருச்சபை அரச குருத்துவத் திருக்கூட்டமாக வருணிக்கப்பட்டுள்ளது (1 இரா. 2:5, 9). திருவெளிபாட்டிலும் திருச்சபை குருக்களின் கூட்டம் என வருணிக்கப்பட்டுள்ளது (1:6, 5:10; 20:6).

இக்குருத்துவம் வேறானதல்ல, மாறாக ஆண்டவரின் குருத்துவத்தில் பங்கெடுப்பதே. இந்தக் குருத்துவம் கிறிஸ்துவின் பலியால் நிறைவேறுவதால் குருக்களின் கூட்டமும் (திருச்சபை உறுப்பினர்) தன்னல மறுப்பாலும் தியாகத்தாலும் உருவாக்கப்பட்டு, பேணப்படுகின்றன. அவர்கள் தங்களிடையே உயிருள்ள பலியாக்குகின்றனர். உரோ. 12:1), இயேசு நம் பலிப்பீடமாகிறார் (எபி. 13:10-16). இறைவனைப் புகழ்தல், நற்செயல்கள், பகிர்தல் யாவும் உண்மையான பலிகளாகக் கருதப்படுகின்றனர்.

6. கடவுளின் வீடு, குடும்பம்

திருச்சபை என்பது கடவுளின் வீடாகவும் (ஒய்கோஸ்) அவரின் குடும்பமாகவும் ஆக்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் ஒரு வீட்டாராக கருதப்பட்டனர். இதுபோல் புதிய ஏற்பாட்டில் இஸ்ராயேலின் ஒரு வீட்டாராக அல்லது யாக்கோபின் வீட்டாராக, மோயீசனின் வீட்டாராக, தாவீதின் வீட்டாராக வருணிக்கப்படுகின்றனர். முக்கியமாக கடவுளின் வீட்டாராக வருணிக்கப்படுகின்றனர் (மத். 10:6; லூக். 1:33, 69; அப். பணி. 2:36, 7:42; எபி. 3:2-6; 1 இரா. 4:17). வீடு

அல்லது விட்டார் என்று ஒருவகை அரசு, இனம், நகரம், ஆலயம் ஆகியவற்றிற்கு இணைச் சொற்களாகும்.

திருச்சபை கடவுளின் மக்களாய் (உய்யோய்) கருதப்படுகிறது. (உரோ. 9:26; 2 கொரி. 6:16-18; எபி. 2:10). வானகத்திலுள்ள ஒருவரே உங்கள் தந்தை (மத். 23:9). இந்த மக்கள் சமாதானம் செய்ய (மத். 4:9) சகோதரர்களை அன்பு செய்ய (1 அரு. 3:10-11) பகைவரை அன்பு செய்ய (மத். 5:41-45) சோதனைகளை வெல்ல (திருவெளி. 21:7) அழைக்கப்பட்டுள்ளனர். உரிமை குடிமக்களாய் வாழவும் அழைக்கப்பட்டுள்ளனர் (கலா. 4:5).

கடவுள் மக்கள் என்ற பதத்தோடு இணைந்து போவது சகோதரர்கள் (அடல்போய்) என்ற பதமாகும். உண்மையில் திருச்சபை என்பது அடிக்கடி சகோதரர்களின் கூட்டம் என்றே அழைக்கப்படுகிறது (1 கொரி. 6:6; 1 அரு. 3:10-17). அப். பணியில் மட்டுமே 30 தடவை திருச்சபை சகோதரர்கள் என்றே அழைக்கப்படுகிறது (15:22-23).

இத்தகு உருவகத்துடன் கிறிஸ்துவின் மணவாட்டி என்ற பதமும் கூறுகிறது (நும்பே). இஸ்ராயேல் எவ்வளவோ வேசித்தனம் செய்தாலும் கடவுளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மணவாட்டியாய் இருந்தது (எரே. 2:1; எசே. 16:23; ஒசே. 3:1-3). புதிய ஏற்பாட்டில் இயேசு மணவாளனாய் சித்திரிக்கப்படுகிறார். அவரின் சீடர்கள் அவருடைய நண்பர்களாய் மற்றும் மக்களாய் வருணிக்கப்படுகின்றனர் (மத். 9:15). அவரின் வருகை திருமண விருந்தாய் வருணிக்கப்படுகிறது (மத். 22:10; 25:1-13).

7. புதிய வழிப்பயணம்

திருச்சபையை நோவாவின் பெட்டகத்துக்கு உருவகப்படுத்தி ஞானஸ்நானம் மூலம் விடுதலை கிடைத்தலைக் குறிப்பிடுகிறது புதிய ஏற்பாடு (1இரா. 3:18-22). துன்புறும் திருச்சபையைச் சிதறுண்ட யூதர்கள் நிலைக்கு உருவகப்படுத்துவதும் உண்டு (யாக. 1:1, 1 இரா. 1:1; திருவெளி. 16:12-18;24).

ஆயினும், மிக அதிகமாகவும் ஆழமாகவும் திருச்சபையை எகிப்திய வாழ்வு, மோயீசனுக்கும் பாரவோனுக்கும் வாக்குவாதம், யாத்திரை, செங்கடலைக் கடத்தல், சீனாய் மலையில் உடன்படிக்கை, பாலைவனத்தில் அலைதல், மன்னா, உடன்படிக்கையின் பேழை முதலியவற்றுடன் ஒப்பிடுவது வழக்கம். இராயப்பர் மற்றும் எபிரேயர் திருமுகங்களில் திருச்சபை

வாக்களித்த நாடு நோக்கிப் பயணம் செய்யும் புதிய இஸ்ராயேலாக வருணிக்கப்படுகிறது (எபி. 10:26; 12:29; 1 இரா. 1:17, 2:11). முக்கியமாய் கிறிஸ்துவின் இறுதி இராவுணவு இஸ்ராயேலரின் பாஸ்காவின் நினைவு; அது இறந்தவர்களின் திருப்பலியில் நினைவு கூறப்படுகிறது.

8. திராட்சைக் தோட்டம், மற்றும் மந்தை

திருச்சபை நிலத்தில் போடப்பட்ட கடுகு மணிக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. இது முளைத்து, வளர்ந்து கிளைவிட்டு, வானத்துப் பறவைகள் வந்து தங்கும் இடமாவதுபோல் திருச்சபை விளங்கும் என்பது இயேசுவின் கணிப்பு.

கடவுளின் மக்கள் திராட்சைத் தோடத்துக்கு ஒப்பிடப்பட்டுள்ளார் (அம்பெலோனா). கடவுள் அதைக் குத்தகைகாரர்களிடம் ஒப்படைத்துள்ளார். அவர்களிடம் கணக்குக் கேட்கிறார் (மாற். 12:1-12; மத். 20:1-16; 21:33-43).

புனித அருளப்பர் இயேசுவைத் திராட்சைக் கொடியாகவும் திருச்சபை மக்களைக் கிளைகளாகவும் வருணிக்கின்றார். இன்னும் பழைய ஏற்பாட்டுப் பாணியில் திருச்சபை கடவுளின் மந்தையாக (பொய்மனியோன்) ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இயேசு நல்லாயனாகச் சித்திரிக்கப்படுகிறார். ஒரே மேய்ப்பனும் ஒரேமந்தையுமானர் என்பது இயேசுவின் கூற்றாகும் (அரு.10:16)

9. கிறிஸ்துவின் உடல்

சின்னப்பர் கடிதங்களில் 'எக்ளேஸியா' என்பது கிறிஸ்துவுக்குள் ஒரே உடல் (உரோ. 12:5) என வருணிக்கப்பட்டுள்ளது கிறிஸ்துவின் உடல் என்றும் வருணிக்கப்பட்டுள்ளது (எபே.1:23). இதற்கு எதிரானது பாவத்தில் ஒரே உடலாய் இருப்பதாகும். கிறிஸ்துவினால் நாம் இப்பாவத்திலிருந்து விடுதலையாகி அவரோடு ஒருடலாகின்றோம். நாம் கிறிஸ்துவின் மரணத்திற்குள் ஞானஸ்நானம் பெற்றுள்ளோம் (உரோ. 6:1-5; 1கொரி. 12:13).

கிறிஸ்துவின் உறுப்பினர்கள் அவரில் வாழ்கின்றனர். அவர் அவர்களில் வாழ்கிறார் (கலா. 2:20). அவர்களின் செயல்கள் அவருக்காகச் செய்யப்படுகின்றன (1 கொரி. 6:13). அவர்கள் அதுக்குரியவர்கள்; ஏனெனில் சாவால் அவரின் உடல் மூலம் இறந்தவர்கள் (உரோ. 7:4).

இதன் காரணமாய் உறுப்பினர்கள் ஒரு (கொய்னோனியா) நட்புறவு முகமாகின்றனர். திருச்சபை என்பது கிறிஸ்துவின் மறையுடல் என்பது குறிப்பிடப்பட்டாலும் கிறிஸ்து தன் தலைவராக இருக்கிறார். அத்தலைவர் மூலம் இறை வாழ்வும், மகிமையும் இந்த மறையுடலில் பாய்கிறது (எபே. 1:22). கிறிஸ்து இதன் தலைவர் என்கிற முறையில் இதை அன்பு செய்கிறார், புனிதப்படுத்துகிறார், மீட்கிறார் (எபே. 5:25). இதன் உறுப்பினர் ஒருவர் ஒருவருடைய துன்பங்களைத் தாங்குகின்றனர்.

10. புதிய மனித இனம்

திருச்சபை என்பது ஒரு புதிய படைப்பின் துவக்கம் புதிய மனித இனத்தின் துவக்கம். இதில் இயேசு கடை ஆதாம். அவருடைய சாயலை நாம் தாங்கவேண்டியவர்கள்.

நாம் எல்லோரும் முதல் ஆதாமில் ஒன்றிணைந்தவர்கள் (உரோ. 5:17). இதன் மூலம் மரணத்தில் பங்கெடுத்தோம் (உரோ. 5:14-15, 18-20). இயேசு இந்த அடிமைத்தனத்தில் நுழைந்து, ஆதாமில் இறந்த அனைவர்க்காகவும் இறந்தார் (உரோ. 5:6-11). கடைசி ஆதாமாக அவர் வந்து உயிர்த்த நம் ஆவியார் (1கொரி. 15:45). இவர் விண்ணக மனிதருக்குரிய சாயல் (1 கொரி. 25:49). அவரில் இணைந்தவர்கள் அவருடைய சாயலைத் தாங்குகின்றனர் (2 கொரி. 3:18). அவர்கள் கடவுளின் மக்களாகவும், கிறிஸ்துவின் சகோதரர்களாகவும் மறுபடியும் பிறந்து ஒரு இலவச நன்கொடையாக வாழ்வளிக்கும் அந்நாளில் பெருமையடைகின்றனர்.

இந்தப் புதிய மனித இனம் சமாதானம், அன்பு ஆகியவற்றைக் கொண்டிருக்கிறது. இறுதிக் கால தூய்மைப் படுத்தலுக்கும், அனைத்தும் ஒன்றிணைதலுக்கும் நடைபோடுகிறது (எபே. 2:1-22).

இங்ஙனம் திருச்சபையைக் குறித்த ஏராளமான உருவகங்கள் வார்த்தைகள் விவிலியத்தில் உள்ளன. திருச்சபையின் தன்மையை அவை வெவ்வேறு கோணத்திலிருந்து தர முயலுகின்றன. மேற்குறிப்பிட்டவை திருச்சபை பற்றிய முழுமையான கண்ணோட்டம் என்று கூறிவிட இயலாது. விவிலியத்தில் வரும் வார்த்தை அமைப்புக்களிலிருந்து திருச்சபையை விளக்க முற்பட்டதன் விரிவுதான் இது.

ஆயினும் மொத்தத்தில் திருச்சபையை கடவுள் சார்ந்த சமுதாயம் (Theocentric Community) என்றும் கிறிஸ்து சார்ந்த சமுதாயம் (Christocentric Community) என்றும் ஆவி சார்ந்த சமுதாயம் என்றும் கூறலாம்.

4. முடிவுரை

திருச்சபை பற்றிய விவிலியம் கூறும் கருத்து மேலே ஓரளவுக்குத் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது. இவை முக்கிய கருத்துக்களும் உருவகங்களும்தான். இன்னும் பல்வேறு கருத்துக்கள் திருச்சபை பற்றி உள்ளன.

விவிலியம் கூறும் கருத்துக்களைத்தான் இங்குப் பார்த்துள்ளோம். திருச்சபை வளர்ச்சியடைந்த நிலையில் அதன் வரலாற்றிற்கேற்ப திருச்சபை பற்றிய கருத்தும் மாற்றம் அல்லது வளர்ச்சி பெற்றுள்ளது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருச்சபை பற்றி ஒரு கொள்கை திரட்டையே வெளியிட்டு பல புதிய குணங்களைக் கூறியுள்ளது. இன்றைய உலகில் திருச்சபை என்றொரு கொள்கைத் திரட்டையும் வெளியிட்டுள்ளது.

3

திருச்சபையின் வாழ்வு

இயேசு பிரான் கொண்டு வந்த திருச்சபை தூய ஆவியானவரின் செயலால் எருசலேமிலிருந்து சிறிது சிறிதாகப் பரவியது. அந்த ஆவி திருச்சபையின் மத, நல்லொழுக்க, உலகியல் வாழ்வுக்கும் அது சமுதாயத்துடன் கொண்டிருந்த உறவுக்கும் காரணமாக அமைந்தது.

1. திருச்சபையின் பரப்பு

அப்.பணி 1:8 - இல் கூறியுள்ளபடி அப்போஸ்தலர்கள் எருசலேமிலும் யூதேயா முழுவதும் சமாரியாவிலும் உலகெங்கும் நற்செய்தியைப் போதிக்க வேண்டியிருந்தது. எருசலேமிலிருந்து தான் அனைத்தும் ஆரம்பமாயிற்று. பழைய உடன்படிக்கையின் புனித நகரமாகிய அது இப்போது புதிய உடன்படிக்கையின் புனித நகரமாயிற்று அங்கேதான் கிறிஸ்து பிரான் உலகத்தின் மீட்புக்காகப் பாடுபட்டார். அங்கேதான் அவர் தன் உயிர்ப்புக்குப் பின்னர், சீடர்களுக்குத் தோன்றி, பின் விண்ணேற்படைந்தார் (அப்.பணி 1:3-9). அங்கேதான் தூய ஆவியானவர் விசுவாசிகள் மீது இறங்கி வந்தார். கிறிஸ்து முதன் முதலாகப் போதிக்கப்பட்டது அங்கேதான். அங்கேதான் திருச்சபை ஒரு மதம் சார்ந்த மற்றும் சமுதாய சக்தியாக உருவானது. அங்கிருந்துதான் எல்லாக் கிறிஸ்தவ அப்போஸ்தலத்துவமும் உருவாக வேண்டியிருந்தது. சின்னப்பரின் அப்போஸ்தலத்துவம் கூட அப்படித்தான் (உரோ. 15:19).

யூதேயா, சமாரியா மற்றும் மண்ணுலகின் இறுதி எல்லையாவும் மூன்று கட்டங்கள் எனலாம். நற்செய்தியானது அனைத்து மக்களுக்கும் சென்றடையவேண்டும். அதோடு அவர்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ அங்கெல்லாம் சென்றடைய வேண்டும். அவர்கள் யூதர்களாக இருந்தாலும் சரி, சமாரியர்களாக இருந்தாலும் சரி, புறவினத்தாராக இருந்தாலும் சரி அது அவர்களுக்குச் சென்றடைய வேண்டும்.

இராயப்பர் முதலில் எருசலேமில்தான் போதித்தார். ஆனால், விரைவிலேயே அவருடைய பணி எருசலேமைச் சுற்றிய மற்ற நகரங்களிலும் நிறைவேற்றப்பட்டது (அப்.பணி 5:16). பின்னர் மற்ற அப்போஸ்தலர்கள் மற்றும் முடியப்பர், பிலிப்பு, பர்னபா, சின்னப்பர் ஆகியோரின் போதனை யூதேயா, சமாரியா, தமாஸ்கு, பெனிக்கியா, சீப்ருஸ், சிலிசியா, சிரியாவின் அந்தியோக்கு ஆகிய தொலைதூரப் பகுதிகளிலும் கேட்டது (அப். பணி 7-14). மொத்தத்தில் அப்போஸ்தலர் மற்றும் போதனையாளர்களின் பணியால் கி.பி. 30 முதல் 47 க்குள் மத்திய தரைக் கடலின் கிழக்குப் பகுதியெங்கும் திருச்சபை பரவலாயிற்று. பின்னர் புனித சின்னப்பர் ஐரோப்பாவில் காலடி எடுத்து வைத்து திருச்சபையைப் பரப்பிக் கொண்டே அக்கால நாகரிக உலகின் தலைநகரிலிருந்த உரோமைக்கும் வந்து சேர்ந்தார்.

இங்ஙனம் திருச்சபை வளர்ந்ததில் ஆச்சரியம் ஏதுமில்லை. அப்போஸ்தலர்கள் மிகுந்த ஆர்வத்தினால் பற்றி எரிந்தவர்களாயிருந்தனர். ஒருபோதும் தளரவில்லை. இதற்குப் புனித சின்னப்பர் ஓர் எடுத்துக்காட்டு. அவருடைய துணையாளர்களாகிய லா, தீமோத்தேயு, தீத்து, அப்பல்லோ போன்றோரும் தனியாக இல்லை. பெயர் தெரியாத ஏராளமான மறைப் போதகர்கள் அவர்களுக்குத் துணைசெய்தனர். வணிகர்கள், அரசு அதிகாரிகள், போர் வீரர்கள், உல்லாசப் பயணிகள், ஆகியவர்கள் உரோமைப் பேரரசுக்குள் அதிகம் பயணம் செய்தனர். இவர்களில் பலர் கிறிஸ்துவின் நற்செய்தியை ஏற்றுக் கொண்டதோடு அதைப் பரப்புகிறவர்களாகவும் மாறினர். இப்படிப்பட்டவர்கள்தான் முதலில் கிறிஸ்தவத்தை இத்தாலிக்கும் முக்கியமாய் உரோமைக்கும் கொண்டு சென்றிருக்க வேண்டும்.

அப்போஸ்தலப்பணி முதலில் நகரங்களில்தான் செய்யப்பட்டது. சின்னப்பர் மற்றும் அப்போஸ்தலர்கள் முக்கியமாய் மாநிலத் தலைநகரங்களில் போதித்தனர். இத்தலை நகரங்களில் விசுவாசம் பரவியபின் அது சுற்றியிருந்த கிராமங்களிலும் ஊடுருவியது.

இட அடிப்படையில் பரவிய திருச்சபை இன்னொரு அடிப்படையிலும் பரவிய முதலில் யூதர்களுக்கு மட்டும் போதிக்கப்பட்ட நற்செய்தி பிறகு சமாரியர்களுக்கும் போதிக்கப்பட்டது. இச்சமாரியர் எருசலேம் மக்களிடமிருந்து பிரிந்து பிற இனத்

தவரோடு புழங்கியதால் தாழ்வானவர்களாகக் கருதப்பட்டவர்கள். மற்ற யூதர்களால் ஒதுக்கப்பட்டவர்கள்). இங்ஙனம் நற்செய்திப் போதனையானது பழைய உடன்படிக்கையின் மக்களை ஒன்று சேர்க்கத் துவங்கியது. பின்னர் இந்நற்செய்தி புறவினத்தாருக்கும் பரப்பப்பட்டது. அதாவது, யூதர்கள் கண்டிப்பாக ஒதுக்கி வைத்திருந்த—கடவுள் அருளுக்கு முற்றிலும் அருகதையற்றவர்கள் எனக் கணித்திருந்த புறவினத்தாருக்கும் பரப்பப்பட்டது.

புறவினத்தாருக்கும் நற்செய்தி போதிக்கப்பட வேண்டும் என அப்போஸ்தலர்கள் உணர்ந்ததை அப்போஸ்தலர் பணி இரண்டு இடங்களில் தெளிவாகச் சொல்லுகிறது (அப்.பணி 11:18; 14:27). எருசலேம் திருச்சங்கத்திலும் ஆவியானவர் இதனை உறுதி செய்தார்.

2. தூய ஆவியானவரின் காலம்

அப்போஸ்தலர் பணியில் முக்கிய நபர் இராயப்பரோ சின்னப்பரோ அல்லர்; மாறாக, தூய ஆவியானவர்தான். திருச்சபையில் தூய ஆவியானவரின் பணியை மூன்று கோணங்களில் நாம் பார்க்கலாம்.

முதலில், பெந்தெகோஸ்து திருநாளில் பொழியப்பட்ட தூய ஆவியானவர் மறைப்போதகர்களை அவ்வப்போது அவர்கள் தங்கள் மறைப்பணி பயணங்களைச் செவ்வனே செய்ய உதவுகிறார். அதன் மூலம் திருச்சபை வளர்கிறது (அப்.பணி 8:26, 39: 9:10; 10:2; 16:6-7; 20:22).

புறவினத்தாரும் மீட்படைய வேண்டியது இறைவனின் திட்டம் என்பதைத் தூய ஆவி வலியுறுத்துகிறார் (அப்.பணி 10:3, 13, 47: 15: 8, 17, 28). அப்போஸ்தலர்களை ஊக்கப்படுத்தி அவர்களுக்கு எதிரான சக்திகளை எதிர்கொள்ள வல்லமை அளித்தது ஆவிதான் (அப்.பணி 4:31; 18:8-10).

இரண்டாவதாக, திருச்சபை ஒன்றித்த நிலையில் விளங்க ஆவியானவர் துணை செய்கிறார். திருச்சபை என்னும் மறையுடலில் சமுதாய இன வேறுபாடுகள் ஒழிக்கப்பட்டுள்ளன (கலாத். 3:28). எருசலேமில் அனைத்து விசுவாசிகளும் ஒருமனப்பட்டிருந்தனர் (அப். பணி 4:32).

மூன்றாவதாக, தூயஆவியானவர் இயேசுவின் சீடர்களுக்கு அவரின் போதனைகளை நினைவூட்டிக்கொண்டிருந்தார் (அரு.

14:26; 15:26; 16:13-14). சுருங்கச் சொன்னால் கிறிஸ்துவின் ஆள்தன்மையை அவர்கள் புரியவும், பழைய ஏற்பாட்டு இறைவாக்குகள் அவரில் நிறைவேறுகின்றன என உணரவும் வைத்தவர் தூய ஆவியானவரே.

3. மதவாழ்வு

திருச்சபையின் வாழ்வு கிறிஸ்துவோடு இணைந்த வாழ்வு. அனைத்து விசுவாசிகளுக்கும் இது ஒரு புதிய வாழ்வாகும். முன்னாள் யூதர், முன்னாள் புறவினத்தார் ஆகிய யாவரும் மனம் திரும்புதல் மூலம் இவ்வாழ்வைப் பெறலாம் (அப். பணி 20:21 26:20). ஆயினும் இந்த இருவகையினருடைய மதவாழ்வும் முதலில் சற்று வேறுபட்டே இருந்தது.

யூதக் கிறிஸ்தவர்கள்

துவக்கத் திருச்சபை எருசலேமில்தான் உதித்தது எனக் கண்டோம். அங்கேதான் அமைப்பு முறையிலான திருக்கூட்டம் இருந்தது. அதுவே கிறிஸ்தவ இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்தியது.

எருசலேமில் முதலில் இயேசுவைப் பின்பற்றினோர் சாலமோன் மண்டபத்தில் கூடினர். அவர்கள் காலம் காலமாகக் கடைப்பிடித்து வந்த பல யூதச் சடங்குகளைச் செய்து வந்தனர். சின்னப்பர் எருசலேம் வந்தபோது இதைக் கண்டுபிடித்தது மட்டுமல்லாது தானும் அவ்விதமே நடந்துகொள்ள வேண்டியதாயிற்று (அப் பணி 21:20-24).

துவக்கக் கிறிஸ்தவர்கள் யூதர்களைப்போல் ஓய்வுநாளைக் கடைப்பிடித்தனர். அவர்களைப்போல் திங்களும் வியாழனும் நோன்பு இருந்தனர். அவர்களின் திருமுழுக்கு அருளப்பரிடமிருந்து பெறப்பட்டது. அவர்கள் நிகழ்த்திய திருப்பலி 'பகிர்வு' ஒரு பழைய நினைவாகவும் (ஓசான்னா) ஐக்கியமானதாகவும் (கொய்னோனியா) ஓர் எதிர்பார்ப்பாகவும் (மாரனாதா) இருந்தது (இவை யூதர்களின் தனித்தன்மையாகும்). எருசலேமில் இருந்ததாக நாம் அறியும் மூப்பர் பதவி யூத முறைப்படியானதே.

ஆயினும் துவக்கத்திலிருந்தே மாற்றங்களும் இருந்தன. யூதச்சடங்குமுறைகளைச் செவ்வனே செய்தாலும்கூட ஞாயிற்றுக்கிழமையை ஆண்டவரின் நாள் என்று கொண்டாடினர். யூதர்களின் ஓய்வுநாளுக்குப் பதிலாக இதைக் கொண்டாடினர் (1 கொரி. 1:62; அப்.பணி 20:7).

ஆண்டவர் இயேசு இறந்த நாள் வெள்ளி என்பதால் அது நோன்பு நாளாக மாறியது. பாடுகள் புதன்கிழமை துவங்கிய தால் அதுவும் நோன்பு நாளானது.

புனித யாகப்பர் எருசலேமில் தலைமைப் பொறுப்பாள ராய் ஏற்றுக்கொள்ளப்பட்டார். அப். பணி பன்னிரு அப்போஸ் தலர்களின் முக்கியத்துவத்தைக் கூறினாலும் எருசலேமில் அதி காரம் யாகப்பரின் தலைமையின் கீழ் இருந்த மூப்பரிடமே இருந்தது.

மூப்பர், அப்போஸ்தலர்களைத் தவிர மற்ற பணியாளர் கள் உருவாயினர். அவர்கள் போதகர்கள் மற்றும் இறைவாக் கினர்கள். முக்கியமாக திருத்தொண்டர் பணி உருவானது. இத்திருத்தொண்டர்கள் முதலில் யூதக் கிறிஸ்தவர்களில் கிரேக்கக் குழுவினரிடத்தில் உருவாயினர். இக்கிரேக்கக் குழுவினர் யூதர்களின் குறுகிய மனப்பான்மையை விடுத்து பரந்த உலகில் கிரேக்க பாதிப்புக்களுக்கேற்ப வாழத் தலைப்பட்டவர் கள். அப்.பணி 6:1-6 பகுதி இதனைச் சுட்டிக் காட்டுகிறது.

துவக்ககாலக் கிறிஸ்தவத்தில் பல வகை கலாச்சாரம் இருந்தது. பாலஸ்தீனிய யூதர்கள், கிரேக்க யூதர்கள், பாலஸ் தீனிய யூதக் கிறிஸ்தவர்கள், கிரேக்க யூதக் கிறிஸ்தவர்கள், கிரேக்க யூதரல்லாத கிறிஸ்தவர்கள் இவர்கள் யாவரும் ஒரு மாபெரும் புறவினத்துச் சமுதாயத்தின் நடுவில் வாழ்ந்தனர். புனித முடியப்பர் கிரேக்க யூதக் கிறிஸ்தவர்களின் பிரதிநிதி யாக விளங்கினர்.

இப்படிப்பட்ட நிலையிருந்ததால் பல நெருக்கடிகள் துவக்கத் திருச்சபைக்கு இருந்தன. அந்நிலை கி. பி. 49 வாக்கில் நடந்த எருசலேம் திருச்சங்கத்தில் வெளிப்பட்டது. இது அப். பணி 15-ஆம் அதிகாரத்திலும் கலாத்தியர் 2:1-10-லும் சொல் லப்பட்டுள்ளது. அப். பணி 15-இல் சொல்லப்பட்டுள்ளதற்கும் கலாத்தியர் 2:1-10-இல் சொல்லப்பட்டுள்ளதற்கும் ஒரு சில வேறு பாடுகள் உள்ளன. அதுவே அக்காலச் சிக்கல் சரியாகத் தீர்க்கப் படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

இங்குச் சின்னப்பர் புறவினத்துக் கிறிஸ்தவர்களுக்குச் சென்று சேரும் நற்செய்தி சுதந்திரமானதாக இருக்கவேண்டும் என வாதிட்டார். அவர்கள் விருத்தசேதனம் போன்ற யூதச் சடங்குகளைச் செய்யவேண்டியதில்லை என வாதிட்டார். நீண்ட தயக்கத்துக்குப்பின் யாகப்பரும் மற்ற மூப்பரும் இதற்கு

உடன்பட்டனர் (இவர்கள் யூதக் கிறிஸ்தவர்களின் பிரதிநிதிகள்). ஆயினும் எவ்வளவு தூரத்திற்கு யூதக் கிறிஸ்தவர்கள் இதற்கு உடன்பட்டனர் என்பது தெளிவாக இல்லை. ஆனால் புனித சின்னப்பர் சங்கத்திலிருந்து வெளியே நுழைகையில் ஒருவேளை தான் அழைத்ததைவிட அதிகம் பெற்றுவிட்டதாக நினைத்திருக்கலாம்.

எப்படியிருப்பினும் கடின ஒழுங்குடைய யூதக் கிறிஸ்தவர்களிடையேயும் கிரேக்க (புறவினத்துக்) கிறிஸ்தவர்களிடையேயும் இருந்த நெருக்கடி கி. பி. 70-ஆம் ஆண்டு நடந்த எருசலேம் வீழ்ச்சி வரை தொடர்ந்தது. அது முதலில் துவக்கப்பட்ட யூதக் கிறிஸ்தவத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தது. உரோமைத் தளபதி கி. பி. 70-இல் படையெடுத்து வந்தபோது பல எருசலேம் கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டனர். பலர் யோர்தானுக்கு அப்பாலுள்ள பெல்லா என்னுமிடத்தில் அடைக்கலம் தேடினர்.

2. புறவினத்துக் கிறிஸ்தவர்கள்

புறவினத்துக் கிறிஸ்தவர்கள் எனப்படுவோர் யூதரல்லாதாராக இருந்து நேரடியாகக் கிறிஸ்தவ மறையைத் தழுவியோர். இவர்களின் அப்போஸ்தலராக புனித சின்னப்பர் கருதப்படுகிறார். ஆயினும், இவர் மட்டும்தான் புறவினத்தாரிடையே போதித்து கிறிஸ்தவ மதத்தை அவர்களிடையே பரப்பினார் என்று கூற இயலாது. இவருடைய கடிதங்கள் நமக்குக் கிடைத்துள்ளதால் இவர் பெரும் அப்போஸ்தலராகக் கருதப்படுகிறார். ஆயினும், இயற்கையான முறையிலேயே கிறிஸ்தவ மதம் புறவினத்தாரிடையே பரவிற்று. வேதகலாபனை, வியாபாரம் ஆகிய இரு முக்கிய காரணங்களால் இது நடந்தேறியது. அப். பணி 11:19-இல் முடியப்பர்பற்றிய கலாபனையில் விசுவாசிகள் பெனிக்கியா, சைப்ரஸ், அந்தியோக்கியா வரைக்கும் சிதறுண்டு போயினர் எனக் கூறப்பட்டுள்ளது. அவர்கள் யூதர்களுக்கு மட்டுமேயன்றி வேறு யாருக்கும் தேவ வார்த்தையை அறிவிக்கவில்லை எனச் சொல்லப்பட்டுள்ளது. இதன் காரணமாய் திருச்சபை முதல் நூற்றாண்டின் இறுதியில் உரோமைப் பேரரசின் முக்கியமான நகரங்களிலெல்லாம் பரவியிருந்தது.

எல்லா இடங்களிலும் கிறிஸ்தவர்களுக்கும் செபக்கூடங்களுக்கும் இடையே உள்ள தொடர்பு யாது என்ற கேள்வியும் கிறிஸ்தவர்களுக்கும் புறவினத்தாருக்குமிடையே உள்ள தொடர்பு யாது என்ற கேள்வியும் எழுந்தது. அப். பணி. 10-இல் புனித இராயப்பர் காட்சி ஒன்று காண்பதாகவும் அதில்

எல்லா இறைச்சியையும் உண்ணலாம் எனக் கட்டளையிடப் படுவதாகவும் படிக்கின்றோம். இது புறவினத்தாரும் கிறிஸ்தவ மதத்தில் சேர்க்கப்பட வேண்டும் என புனித இராயப்பர் அறிய வருவதைச் சுட்டிக் காட்டுகிறது.

சின்னப்பர் பிசிதியாவிலுள்ள அந்தியோக்கியாவில் ஒரு முதல் மாற்றத்தைக் கொண்டு வருகிறார். அங்குள்ள யூதர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள மறுத்ததால் புறவினத்தாருக்குப் போதிக்கத் தலைப்படுகின்றார். நீங்கள் அதைப் புறக்கணித்து முடிவில்லா வாழ்விற்குத் தகுதியற்றவர்கள் என நீங்களே உங்களுக்குத் தீர்ப்பிட்டுக் கொண்டீர்கள். ஆதலால், இதோ நாங்கள் உங்களை விட்டுப் புறவினத்தார்பால் செல்கின்றோம் (அப். பணி. 13:46). ஆயினும், அவர் அவர்கள் எல்லாருக்கும் போதித்தார் (யூதர்களையும் புறக்கணிக்கவில்லை). பின்னர் புற வினத்தாருக்கே அதிகம் போதிக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. அப். பணி 16:9-இல் மகதோனியாவிற்குச் சின்னப்பர் செல்ல வேண்டும் எனக் காட்சி காண்கின்றார். அதற்குச் சின்னப்பர் இசைவது பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில், மகதோனியாவிற்குச் செல்வது கிறிஸ்தவம் ஆசியாவிலிருந்து முதன் முதலாக ஐரோப்பாவிற்குள் நுழைவதாகும். கிறிஸ்தவம் யூதர்களின் ஒரு பிரிவா அல்லது உலகையே அதிரச்செய்யும் சக்தியா என்பதை அது தீர்மானித்தது.

இரண்டாம் நூற்றாண்டின் இறுதிக்குள் கிறிஸ்தவம் உரோமைப் பேரரசின் எல்லா மாநிலங்களுக்கும் மற்றும் மெசபத்தோமியாவிற்கு வெளியிலும் பரவிற்று. இக்காலத்தில் அது எல்லாவித சமூகப் பிரிவினரிடையேயும் நுழைந்திருந்தது. அப்போஸ்தலர்கள் அப்போது இல்லை.

அருளப்பர் உரோமையில் நுழைந்து போதித்தார். சின்னப்பர் நீதி விசாரணைக்காக உரோமைக்கு அழைத்து வரப் பட்டார். இருவரும் அங்கு மறை சாட்சிகளாய் இறந்தனர். அருளப்பர் முதிர்ந்த வயதுவரை வாழ்ந்து இறந்தார். பொலிக் கார்ப்பு எனும் புனிதர் அவரை அறிந்திருந்தார். தோமையார் இந்தியா வந்து போதித்து மறைசாட்சியாய் மரித்தார்.

அப்போஸ்தலர்களுக்கு நடந்தது எல்லாமே முக்கிய காலக் கட்டத்தில் நடந்தது. ஏனெனில், துவக்க கால அப்போஸ்தலத் தலைமை மாற்றப்பட்டு நிறுவன அமைப்புக்கள் தலைமைப் பொறுப்பை ஏற்றன. யாகப்பரின் மரணம் மற்றும் எருசலேமின் வீழ்ச்சியினால் எருசலேம் திருச்சபையின் தலைமைத் தன்மை

நீங்கலாயிற்று. அதோடு புறவினத்தாருக்கு முக்கியத்துவம் கொடுத்த சின்னப்பரின் கடிதங்கள் எங்கும் பரவ ஆரம்பித்தன.

இங்ஙனம் உப அப்போஸ்தலர்களின் காலத்துச் சூழ்நிலையில் திருச்சபை ஒரு புறவினத்துக் கிறிஸ்துவ நிறுவனமாய் எழுந்தது. அதன் புதிய தன்மைகள் உரோமைப் பேரரசின் எல்லா இடங்களிலும் பரவலாயிற்று. எருசலேம் எனும் தாய்த் திருச்சபையின் சுவடே மறைந்து விட்டது. அவரின் பிள்ளைகளோ யூத முறைமைகளை உடைத்தெறிந்து விட்டு புறவினத்து உலகை எதிர்கொள்ளத் தயாரானார்கள்.

4. உலகியல் வாழ்வு

எருசலேமில் வாழ்ந்த முதல் கிறிஸ்துவர்கள் தங்களுக்கென்று எதையும் கொள்ளவில்லை. எல்லாவற்றையும் பொதுச் சொத்தாகக் கருதினர் (அப். பணி 2:44; 4:32). அது மட்டுமன்று தங்கள் சொத்துக்களை விற்று அப்போஸ்தலர் பாதத்தில் வைத்தனர். அவர்கள் அவற்றை ஒவ்வொருவரின் தேவைகளுக்கேற்ப பகிர்ந்தளித்தனர் (அப். பணி 2:45; 4:34-35).

இதற்குக் காரணம் இந்த உலகம் விரைவில் முடிவுக்கு வருகிறது என்கிற நம்பிக்கையாகும். தெசலோனிக்கேயர்கள் இத்தகு நம்பிக்கை கொண்டிருந்ததால் வேலை செய்வதினின்று நின்றுவிட முனைந்தனர் (2தெச. 3:6-12). ஆயினும், இவ்வுலகம் அவர்கள் எதிர்பார்த்தபடி உடனே முடிவுக்கு வராததால் அவர்கள் கொண்டிருந்த பொதுவுடைமை நிலை தோற்றது. ஆயினும், அவர்களின் ஆன்மீக வாழ்வு தோற்றுவிட்டதாக இதற்குப் பொருளல்ல.

புனித சின்னப்பர் கிளைச் சபைகளுக்குப் பொருளுதவி செய்ய நிதி திரட்டும் பணியையும் செய்தார். இதற்குப் பலர் முன்முவந்து உதவினர். சின்னப்பரைப் பொறுத்தவரை இது தாராள உள்ளத்தின் வெளிப்பாடு மட்டுமல்ல, அனைத்துச் சபைகளும் ஒரே மீட்பரை ஏற்றுக்கொண்டு ஒன்றித்த நிலையில் செயல்படுகின்றன என்பதன் வெளிப்பாடாகும் (2 கொரி. 9;12-13).

புறவினத்தாரைப் பொறுத்தவரை அவர்கள் பொருளுதவி செய்வது தாங்கள் கொண்டிருந்த கடனைத் திருப்பிச் செலுத்துவதாகும் என்பது புனித சின்னப்பரின் கருத்தாகும். யூதர்கள் மூலமாக கடவுள் மீட்பரையும் மீட்பையும் உலகுக்குக் கொடுத்தார். அந்த நன்றிக்கடனை இப்படிப் பொருளுதவி மூலம் புறவினத்தார் செய்து காட்டவேண்டும் (உரோ. 14:26-27).

புனித சின்னப்பர் இதன் மூலம் நற்செய்தி மனிதனின் ஆன்ம மற்றும் உலகியல் நன்மைகளைக் கொடுக்கிறது எனப் பறைசாற்றுகிறார். ஆன்மீக நலன்களும் உலகியல் நலன்களும் பதிலுக்குப் பதிலாகப் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

5. திருச்சபையும் சமுதாயமும்

திருச்சபை அனைத்துத் தரப்பு மக்களையும் ஒன்று சேர்த்தது. ஏழைகள் மட்டுமே முதலில் திருச்சபையில் சேர்ந்தனர் என்பது சரியான கணிப்பு அல்ல. புனித சின்னப்பர் கருத்துப்படிப்பார்த்தால் செல்வந்தக் கிறிஸ்தவர்கள் திருச்சபையில் இருந்தனர் (1 கொரி. 1:11; 11:21-22). எல்லா இடங்களிலும் நல்ல பதவியிலிருக்கும் ஆண்களும் பெண்களும் திருச்சபையில் சேர்ந்தனர் (லூக். 8:3; அப்.பணி 16:16; 17:4, 7, 12, 34). செல்வந்தர்கள் தங்கள் இல்லங்களைத் திருச்சபையிடம் ஒப்படைத்தனர் (அப்.பணி 16:14-15; உரோ. 16:23; 1 கொரி. 16:9; கொலோ. 4:1; பிலமோன் 2).

பெண்கள் அக்காலத்தில் தாழ்நிலையில் இருந்தாலும் முதல் நூற்றாண்டில் பெண் விடுதலையின் விழைதல்கள் காணப்படுகின்றன. அவர்கள் திருச்சபையில் சேர்ந்து துணைப் பணி செய்தனர். இதைச் சின்னப்பர் அங்கீகரித்தார் (உரோ. 16:1; பிலிப்பியர். 4:37). கீழை நாட்டுக் கருத்துப்படி மனைவியானவள் அனைத்திலும் கணவனுக்குப் பணிய வேண்டியவளாவாள். சின்னப்பர் இதனை மாற்றி இருவருக்கும் சம உரிமை உள்ள நிலையை வற்புறுத்துகிறார்.

அடிமைகளைப் பொறுத்தவரை சின்னப்பர் சொல்வது அவர்கள் தங்கள் தலைவருக்குப் பணியவேண்டும் என்பதே (எபே. 6:5-8; கொலோ. 3:22-25). ஆயினும், தலைவர்களுக்கு அவர் சொல்வது அவர்களுக்கும் விண்ணுலகில் ஒரு தலைவர் உள்ளார் என்பதாகும் (எபே. 6:9; கொலோ. 4:1). இதே கருத்து பிலமோனுக்கு எழுதிய கடிதத்திலும் காணப்படுகிறது. பிலமோனிடமிருந்து தப்பிச் சென்ற ஒனேசிமுஸ் எனும் அடிமையைத் திருப்பி அவரிடம் அனுப்புகிறார். ஆனால், அவனைச் சகோதரன் ஒருவனை நடத்துவதுபோல் நடத்துமாறு கேட்கிறார்.

இப்படி அடிமைகள் முதலான காரியங்களில் எச்சரிக்கை உணர்வோடு நடந்து கொள்வதற்குரிய காரணம் இவ்வுலகம் சீக்கிரம் மறையப் போகிறது எனும் நம்பிக்கையே (1 கொரி.

7:31). எனவே, எல்லாரும் தாங்கள் இருக்கும் நிலையிலேயே இருந்து கொள்ளட்டும் (1 கொரி. 7:20). திருச்சபையானது அக்காலத்தில் இருந்த சமுதாய நிலைமையை மாற்ற விழையாமைக்கு இதுவே காரணம்.

புனித சின்னப்பர் விசுவாசிகள் புறவினத்தாருடன் கொண்டிருந்த உறவினின்று விலக வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறார் (1 கொரி. 5:9-10). நாட்டிற்கும் விசுவாசமுள்ளவர்களாய் நடக்குமாறு கேட்கிறார் (உரோ. 13:1-7).

ஆயினும், திருச்சபை புதிய அமைப்பை உருவாக்காமலில்லை. அது தனக்கேயுரிய சமுதாய அமைப்பை உருவாக்கியது. அதுவே கிறிஸ்துவ சமுதாயமாகும். அந்தச் சமுதாயம் இன, சமூக வேறுபாடுகளை மறந்தது (கலாத். 3:28). அது தனக்குத்தானே சில ஒழுங்குமுறைகளை விதித்தது (மத். 18:18). புறவினத்து நீதிமன்றங்களை நாடவில்லை (1 கொரி. 6:1-6). தனக்கேயுரிய ஒரு வித்தியாசமான அமைப்பு முறையோடு திருச்சபை விளங்கியது.

.6 திருச்சபையும் அரசும்

உரோமைப் பேரரசுதான் அக்காலத்தில் பல நாடுகளிலும் பரவியிருந்தது. பாலஸ்தீனா கி.மு.63-இல் பாம்பியால் கைப்பற்றப்பட்டு உரோமைப் பேரரசின் கீழ் வந்தது. பேரரசு சிற்றரசர்களை நியமித்து கப்பம் பெற்றது. உரோமையிலிருந்து ஆளுநர்களையும் நியமித்தது. திருச்சபை முதலில் துவக்கப்பட்டபோது அது ஒரு தனி மதமாகக் கருதப்படவில்லை. பழைய ஏற்பாட்டின் நிறைவாகத்தான் அது கருதப்பட்டது. யூதர்கள் எதிர்பார்த்த மெசியா கிறிஸ்துதான். அவரில்தான் பழைய ஏற்பாட்டின் முன்னறிவிப்புகள் யாவும் நிறைவேறுகின்றன. எனவே, அவர் கொண்டுவந்த புதிய நெறி பழைய ஏற்பாட்டின் - யூத மதத்தின் நிறைவாகத்தான் கருதப்பட்டது.

உரோமைப் பேரரசைப் பொருத்தவரை அது தன் எல்லைக்குள் வேறு மதங்களை அனுமதிக்க விரும்பவில்லை. பேரரசு வலுவுள்ளதாக இருக்கவேண்டுமாயின் பேரரசனைக் கடவுளாக வணங்க வேண்டும் (சில மன்னர்கள் தங்களையே கடவுளாக அறிவித்துக்கொண்டனர்). பேரரசின் ஒற்றுமை கட்டிக் காக்கப்பட வேண்டுமாயின் வேறு மதங்கள் இருத்தலாகாது என அரசினர் எண்ணினர். ஆனால், யூத மதத்தை அவர்கள் விட்டு வைத்தனர். யூதர்களின் மதவிவகாரங்களில் அவர்கள்

தலையிட விரும்பவில்லை. யூத மதத்தால் தங்களுக்குப் பாதிப்பு இல்லை என எண்ணினர். கிறிஸ்தவ மதம் யூத மதத்தின் ஒரு பிரிவு என்றோ அல்லது அதன் நிறைவு என்றோ இருக்கும்வரை பேரரசின் அதிகாரிகளுக்கு அது ஒரு பிரச்சினையல்ல. ஆனால், அது ஒரு தனிமதமாகக் கருதப்படுகிற பட்சத்தில் அதை அவர்களால் அங்கீகரிக்க இயலாது. பல நேரங்களில் கிறிஸ்தவ மதத்தைத் தனிமதமாக நினைப்பதா அல்லது யூத மதத்தின் பிரிவாக எண்ணுவதா என்பதில் பேரரசின் அதிகாரிகளுக்குக் குழப்பம் இருந்தது. அப்போஸ்தலர் பணி இதனைப் படம் பிடித்துக் காட்டுகிறது. யூதர்கள் அப்போஸ்தலர்களுக்கு எதிராகக் குற்றச் சாட்டுகளைக் கொண்டுவந்து அவர்களைக் கலகக்காரர்களாகக் காட்டுகையில் பேரரசின் அதிகாரிகள் பெரும்பான்மையான நேரங்களில் அவர்களிடம் குற்றம் ஏதும் காண இயலாமல் அவர்களை விடுதலை செய்கின்றனர். சில நேரம் குழம்புகின்றர்:

அப்போஸ்தலர்பணி எழுதப்பட்ட நோக்கங்களில் ஒன்று உரோமைப் பேரரசின் நல்லெண்ணத்தைப் பெறுவதாகும். கிறிஸ்தவ மதத்தை யூத மதத்தின் நிறைவு எனக்காட்ட புனித லூக்காஸ் முயலுகிறார் (அப். பணி 26:6-8). கலகம் உண்டு பண்ணி உரோமைப் பேரரசுக்குச் சிக்கலை ஏற்படுத்துவது கிறிஸ்தவ மதமல்ல என்பதை நிலைநாட்ட முற்படுகிறார். உரோமை அதிகாரிகளும் அப்போஸ்தலர்களைக் குற்றமற்றவர்களாகக் காண்பது, கிறிஸ்தவ மறையை அவர்கள் அனுமதிப்பதைச் சுட்டிக் காட்டுகிறது அல்லது அனுமதிக்கவேண்டும் எனும் வேண்டுகோளை மறைமுகமாக விடுக்கிறது.

—●—

4

திருச்சபையின் அமைப்பு

திருச்சபை என்பது கிறிஸ்துவின் உடல். இதில் ஒவ்வொரு உறுப்பினரும் தன் அமைப்பிற்கேற்றபடி பணி செய்யவேண்டும். கிறிஸ்துவின் உடலாம் திருச்சபையில் இறந்த உறுப்பினர் யாரும் இல்லை. ஏனெனில், இந்தத் திருச்சபை எனும் உடல், வாழும் உடலாகும். எல்லாரும் பணி செய்தாலும் சில உறுப்பினரின் பணி கண்டிப்பாகச் செய்யப்பட வேண்டிய தவிர்க்க இயலாத பணியாகும்.

கிறிஸ்து மீட்பின் பணியைச் செய்துவிட்டார். அது மீண்டும் செய்யப்படுவதில்லை. ஆனால், அவர் சிலரைத் தெரிந்தெடுத்துத் தனக்குச் சாட்சிகளாய் இருக்கச்செய்கிறார். அவர்கள் அவரின் மீட்புப் பணியை உலகெங்கும் எடுத்துரைக்க வேண்டும். அப்போஸ்தலர்கள் இப்பணியைச் செய்தனர். ஆயினும், இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரைத் தொடர்ந்து நடைபெற வேண்டும். அப்போஸ்தலர்களின் இப் பணியைத் தவிர வேறு பணிகளும் உண்டு; அவையும் அப்போஸ்தலப் பணிபோல் மிக இன்றியமையாதவையே. திருச்சபையின் அமைப்பு முறை அதன் பணியைச் சார்ந்து உள்ளது. அதனை ஈண்டு காண்போம்.

1. அப்போஸ்தலர்கள்

புதிய ஏற்பாடு இருவகையில் இச்சொல்லைப் பயன்படுத்துகிறது. முதல் வகையில் இது பர்னபா போன்ற மறைப் போதகர்கள் மற்றும் தனிப்பட்ட சபைகளுக்கான தூதுவர்களைக் குறிப்பிடுகிறது.

இரண்டாம் வகையில் இது புதிய ஏற்பாடு மற்றும் கிறிஸ்தவ பாரம்பரியத்தால் இயேசுவின் அதிகாரப்பூர்வ பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களைக் குறிக்கிறது. பன்னிரு அப்போஸ்தலரும், புனித சின்னப்பரும் இவ்வகையினரே.

அப்போஸ்தலத்துவம் என்ற சொல் 'அப்போஸ்டெல்லெயின்' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து வருகிறது. அச்சொல்லுக்கு அனுப்புதல் என்பது பொருள். அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவால் உலகெங்கும் என்றும் நற்செய்தி அறிவிக்க அனுப்பப்பட்டவர்கள் (அப். பணி 1:8). அவர்கள் கிறிஸ்துயேசுவின் பணி, போதனை, பாடுகள் மரணம் மற்றும் உயிர்ப்புக்குச் காட்சிகள்.

உலகின் மீட்புக்கு கிறிஸ்துவின் பாடுகள் மரணம் மற்றும் உயிர்ப்பு மட்டும் போதாது. ஆனால், அது எல்லா இடங்களிலும் அறிவிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு இயேசுவின் வல்லமை கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் இறைவார்த்தையைத் துணிவுடன் எடுத்துரைக்கின்றனர் (அப். பணி 4:29). கிறிஸ்துவைப்போல் அற்புதங்களையும் அருங்குறிகளையும் செய்து காட்டுகின்றனர் (அப். பணி 4:30; 2 கொரி. 12:12). அப்போஸ்தலர்கள் சிறு சிறு சபைகளுக்குமேல் மட்டுமல்லாமல் முழுத் திருச்சபைக்கும்மேல் அதிகாரம் கொண்டு விளங்கினர்.

அப்போஸ்தலர்களில் யூதாஸ் இறந்ததும் மத்தியாஸ் தேர்ந்துகொள்ளப்பட்டார். இது பன்னிருவராக அப்போஸ்தலர்கள் விளங்க வேண்டும் எனும் எண்ணத்தைச் சுட்டிக்காட்டுகிறது. (இஸ்ராயேலின் பன்னிரு கோத்திரங்களின் தொடர்ச்சி) ஆனால், யாகப்பர் கொலையுண்டபோது வேறு அப்போஸ்தலர் தேர்ந்தெடுக்கப்படவில்லை. காரணம் அவருடைய அப்போஸ்தலத்துவம் நித்தியமானது என நினைத்தனர்.

2. திருத்தொண்டர்கள் (தியாக்கோன்கள்)

தியாக்கோனோஸ் என்ற சொல் திருத்தொண்டரைக் குறித்தது. எருசலேம் திருச்சபையில் 7 திருத்தொண்டர் (தியாக்கோனோஸ்) தேர்ந்தெடுக்கப்பட்டனர். அந்த ஏழு பேரும் அப்போஸ்தலர்களால் செபத்துடனும் கரங்களைத் தலையில் வைப்பதாலும் நியமிக்கப்பட்டனர் (அப். பணி 6:1-6). அந்த ஏழு பேரில் இருவர் முக்கியமானவர்களாய் விளங்கினர். முடியப்பர் (அப். பணி 6-7), பிலிப்பு (அப். பணி 8) ஆகிய இருவருமே அவர்கள். எருசலேமுக்கு வெளியேயும் யூதரல்லாதாருக்கும் அவர்களே முதலில் மறைப்போதித்தனர்.

பிற்காலத்தில் (தீமோத்தேயு, தீத்து காலத்தில்) திருத்தொண்டர்கள்பற்றிய குறிப்பும் காணப்படுகிறது. அவர்கள் நல்லொழுக்கம் உடையவராய் செயல்திறன் உடையவராய் விளங்கவேண்டும் எனப் புனித சின்னப்பர் கடிதம் அறிவுறுத்து

கிறது (தீமோ. 3:8-13). அவர்களின் பணி குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. நடைமுறைச் செயல்திறன்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளதால் அவர்கள் உதவி செய்யும் பணியும் நிர்வாகப் பணியும் கொண்டவர்களாக விளங்கவேண்டும் என்பது கணிக்கப்படலாம். (தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட கடிதத்தில் இவைக் குறிக்கப்பட்டுள்ளன. அக்கடிதம் சின்னப்பருக்குப் பிந்தைய காலத்தது என்றும் அவர் பெயரால் பிறகு எழுதப்பட்டது என்றும் கருதப்படுவதால் இது பிற்கால திருத்தொண்டர்களைக் குறிப்பதாகும்).

பிற்கால அமைப்பில் திருத்தொண்டர்கள் மூன்றாம் இடம் பெற்றனர். முதலில் ஆயர்கள், இரண்டாவது மூப்பர்கள், திருத்தொண்டர்கள் ஆயரால் அபிஷேகம் செய்யப்பட்டனர். ஆயருக்கு உதவி செய்தனர். வழிபாடு மற்றும், மேய்ப்புப்பணியில் அவருக்கு உதவி செய்தனர்.

திருப்பலியில் திருத்தொண்டர்கள் மக்களின் காணிக்கைகளைப் பெற்றனர். நற்கருணை வழங்குவதில் உதவி செய்தனர். இன்றும் பிற்காலத்தில் திருப்பலியில் நற்செய்தி வாசிக்கும் உரிமையைப் பெற்றிருந்தனர். அவர்கள் நோயுற்றோரைச் சந்தித்தனர், ஏழைகளைச் சந்தித்தனர், விதவைகள், அனாதைகள், சிறையிலிருப்போரைச் சந்தித்து அவர்களின் தேவைகளை ஆயரிடம் தெரிவித்து, திருச்சபையின் உதவியைப் பெற்றுக் கொடுத்தனர். திருப்பலிக்கு வர இயலாதவர்க்கு நற்கருணை எடுத்துச்சென்றனர்.

தியாக்கோன் எனும் திருத்தொண்டர் பதவி யூதரின் அமைப்பிலிருந்து பெறப்பட்ட ஒன்றா என ஆய்வாளர் ஆய்கின்றனர். யூதச் செபக்கூடத்தில் செபக்கூடத் தலைவனுக்கு 'ஹஸ்ஸான்' எனும் உதவியாளர் இருந்தார். பொதுவாழ்விலும் தியாக்கோன்கள் இருந்தனர். ஆனால், அவர்கள் வெறுமனே ஊழியர், தூதுவர், அரச அலுவலர் என்ற பொருளில்தான் விளங்கினர். அந்த நிலைக்கும் கிறிஸ்தவ திருத்தொண்டர் நிலைக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. பின்னது திருச்சபையின் தனிப்பட்ட சூழலில் எழுந்தது. இதற்கு கிறிஸ்துவே மாதிரி. அவர் தியாக்கோனியர் எனும் பணிபற்றி போதித்ததும் செய்து காட்டியதுமே திருத்தொண்டர்க்கு மாதிரியாகும் (மாற் 10:45).

3. பெண் திருத்தொண்டர்

திருச்சபை அமைப்பில் துவக்கத்தில் பெண் திருத்தொண்டர் இருந்தனரா என்பது சர்ச்சைக்குரிய காரியம். உரோ. 16:1

-இல் தியாக்கோனஸ் எனும் சொல் கெங்கிரேயாவிலுள்ள பெபேயாளைக் குறித்துப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சிலர் இதை முன்னிட்டு பெண் திருத்தொண்டர் அக்காலத்திலேயே இருந்தனர் என வாதிட்டாலும் இவ்வார்த்தை பொதுவான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று கூறவேண்டும். செல்வச் சீமாட்டியான அப்பெண் தன் செல்வத்தை அப்போஸ்தலப் பணிக்கு அளித்து மறைமுகமாக அப்போஸ்தலப் பணி புரிந்து இருக்கவேண்டும்.

1 தீமோ. 3:11-இல் திருப்பணியாளரின் மனைவியர் பற்றிக் கூறப்பட்டு அவர்கள் கடைபிடிக்க வேண்டிய குணங்கள் கூறப்பட்டுள்ளன. 'குணாயிக்காஸ்' எனும் இச்சொல் பெண்கள் என மொழிபெயர்க்கப்பட்டு பெண் தியாக்கோன்களைக் குறிக்கலாம் எனச் சிலர் வாதிட்டாலும் அது தியாக்கோன்களின் மனைவியரைக் குறிப்பது என்றே பலரும் கருதுகின்றனர்.

ஆயினும், இரண்டாம் நூற்றாண்டில் பெண் திருத்தொண்டர் இருந்தனர் என்பதை இளையபிளைனியின் எழுத்தோவியத்திலிருந்து அறிகிறோம். பிளைனி தான் இரு கிறிஸ்தவ பணிப்பெண்களை சித்திரவதைக்குட்படுத்தியதாக டிராஜன் மன்னனுக்கு எழுதுகின்றார். அப்பெண்கள் தியாக்கோன்கள் எனப்படுபவர் என்கிறார்.

மூன்றாம் நூற்றாண்டிலுள்ள திதாஸ்காலியா எனும் நூல் பெண் திருத்தொண்டர் பணிகளைச் சுருக்கமாய் தருகிறது.

(1) அவர்கள் பெண்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கையில் முக்கியமாய் எண்ணெய் பூசுதலுக்கு உதவி செய்தனர்.

(2) புறவினத்தார் வீடுகளில் விசுவாசிகளான பெண்கள் இருந்தால் அவர்களைச் சந்திப்பது, நோயுற்றோரைப் பார்த்தல், நோய் நீங்கியவரைக் குளிப்பாட்டுதல் போன்ற பணிகளைச் செய்தனர்.

4. மூப்பர்கள்

'பிரஸ்பூத்தெரோஸ்' என்ற கிரேக்கச் சொல்லுக்கு நேரடி பொருள் 'மூத்தவர்' என்பதாகும். இச்சொல் ஊதாரி மகன் உவமையில் மூத்த மகனுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ முறையிலுள்ள மூப்பர்கள் (பிரஸ்பூத்தெரோஸ்) யூத முறையினின்று பெறப்பட்டது. ஒவ்வொரு யூதச் சங்கமும் மூப்பர்களால் ஆனது. கும்ரான் சமூகத்தில் இம்மூப்பர்கள் குருக்களுக்கு அடுத்த இடத்தைப் பெற்றிருந்தனர்.

அப்போஸ்தலர் பணியில் நாம் வாசிக்கின்றபடி எருசலேம் திருச்சபையில் மூப்பர் பலர் இருந்தனர். இவர்கள் யாகப்பர் மற்றும் அப்போஸ்தலர்களுடன் இணைந்து பணிபுரிந்தனர் (அப். பணி 11:30; 15:2, 4, 6, 22-23; 16:4; 21:18). சின்னப்பரும் பர்னபாவும் சின்ன ஆசியாவில் தாங்கள் ஏற்படுத்திய திருச்சபைக்காக மூப்பர்களை ஏற்படுத்தினார் (அப்.பணி 14:23). சின்னப்பர் எருசலேமுக்குப் போகையில் எபேசு நகர் மூப்பர்களைச் சந்தித்தார் (அப். பணி 20:17).

மூப்பர்களிடம்தான் சின்னப்பரும் பர்னபாவும் அந்தியோக்கியாவில் பெற்ற காணிக்கையைக் கொடுத்தனர் (அப்.பணி 11:30). இந்த மூப்பர்கள் தேர்வு செய்யப்பட்ட விதமோ அவர்களின் பணியோ, அப்.பணியில் தெளிவாகக் குறிப்பிடவில்லை.

லீட்புட் என்பவரின் கருத்துப்படி ஆயர் பதவி என்பது மூப்பர் பதவியிலிருந்து பிற்காலத்தில் மெதுவாக எழுந்ததாகும்.

சின்னப்பர் எபேசு நகர் மூப்பர்களுக்குப் பிரியாவிடை கொடுப்பது கூறப்படுகையில் அப்போஸ்தலர் பணியில் 'எப்பிஸ்கோப்போய்' என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது (அப்.பணி 20:28). அந்த இடத்தில் அச்சொல் நேரடியாக ஆயர்களைக் குறிக்கிறதா, மேற்பார்வையாளர்களைக் குறிக்கிறதா அல்ல பாதுகாவலர்களைக் குறிக்கிறதா என்பது சர்ச்சைக்குரிய விஷயம். தீத்து 1:5-7 - இல் மூப்பரின் தகுதிகளும், ஆயரின் தகுதிகளும் இணைந்தே சொல்லப்படுகின்றன.

இந்தக் குழப்பம் இருப்பினும் பிற்காலத்தில் புனித இக்னேஷியஸ் கடிதத்தில் மூப்பர்கள் ஆயர்களிடமிருந்து வேறுபட்டவர்கள் என்பது தெளிவாகப் புரிகிறது. அவர் காலத்தில் ஆயர் பதவி வலுப்பெற்றிருந்தது. அப்போது இரண்டாம் இடத்தில் மூப்பர்கள் இருந்தனர். அவர்கள் நிர்வாகத்தில் ஈடுபட்டனர். ஆயருக்கு அறிவுரை வழங்கும் சங்கத்தில் இருந்தனர். ஆயர் இல்லாத நேரத்தில் அவர்கள் ஆயருக்குப் பதில் அருட்சாதனக் கொண்டாட்டங்களுக்குத் தலைமை வகித்தனர்.

இப்படித்தான் மூப்பர்கள் குருக்கள் எனும் முறையிலுள்ள பணிகளைச் செய்தனர். ஆக, நாம் இன்று கூறும் குருக்களின் பணி அக்கால மூப்பர்களின் பணியாகும். ஆயினும், மூன்றாம் நூற்றாண்டில்தான் குருக்கள் என்ற சொல் மூப்பர்களுக்குப் பயன்படுத்தப்பட்டது. (ஆயர்களுக்கும் அது பயன்படுத்தப்பட்டது, அவர்களும் அடிப்படையில் குருக்கள் என்ற முறையில்)

5. ஆயர்கள்

'எப்பிஸ்கோப்போஸ்' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து இந்தப் பதம் வருகிறது. அச்சொல்லுக்கு 'மேற்பார்வையாளர்' என்பது நேரடிப் பொருள். இச்சொல் மேய்ப்புப்பணி திருமுகங்களில் இருமுறை வருகிறது (1திமோ. 3:2; தீத்து. 1:7). ஆனால், பிலிப். 1:1 லும் அப்.பணி 20:28 லும் இது ஆயர்களைத்தானா குறிக்கிறது என்பது ஐயப்பாட்டிற்குரியது. தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட கடிதத்தில் ஆயருக்குரிய குணங்கள் சொல்லப் பட்டுள்ளன. ஆக, ஆயர்கள் முதலில் மேற்பார்வையாளர் என்ற நிலையில் பணிபுரிந்தவர்கள் என்பது புலனகிறது.

இருப்பினும், பிற்காலத்தில் அவர்களின் பணி வளர்ச்சியுற்றது. அந்தியோக்கு இஞ்ஞாசியாரின் (கி.பி. 117) கடிதங்களில் இப்பணிகளைக் காணலாம். ஆயரின் பொறுப்பிலுள்ள சபைக்கு அவர் கடவுளின் அதிகாரத்தைக் கொண்டுள்ளார் என்றும், ஞானஸ்நானம், திருப்பலி, நட்புறவு கூட்டங்கள் (அகாப்பே) யாவும் அவருடைய பிரசன்னமோ அனுமதியோ இன்றி நடத்தப்படக்கூடாது என்றும் தெரிகிறது. அவரே மந்தையின் பிரதான மேய்ப்பர். அவரே பிறரன்புப் பணியின் நிர்வாகி. மூப்பர்கள் அவருக்கு அறிவுரை வழங்கும் சங்கத்தினராகப் பணிபுரிந்தனர். திருத்தொண்டர்கள் அவருக்குக் கீழ்ப்பட்டவர்களாய் வழிபாட்டிலும், மேய்ப்புப்பணி சந்திப்பிலும் உதவி செய்தனர். ஆயர் மட்டுமே கன்னியரின் வார்த்தைப் பாட்டைப் பெறமுடியும். அக்கால விதவைகளின் சங்கத்தில் அவரே விதவைகளைச் சேர்த்தார், பிற சபைகளுக்கு அவரே தூதுவர்களை நியமித்தார். போதனை, மறைப்போதகம் யாவற்றிற்கும் அவரே பொறுப்பு. ஆயினும், அவர் அதைப் பிறரிடம் அவ்வப்போது ஒப்படைக்கலாம். மொத்தத்தில் ஆயரே பிரதான குரு, மேய்ப்பர் மற்றும் திருச்சபையின் ஆளுநர்.

இந்த ஆயர்கள் முதலில் சிறு சிறு குழுக்களுக்கு மேற்பார்வையாளராக இருந்தனர், அப்போஸ்தலர் காலம் முடிந்த பின் ஏற்பட்ட நெருக்கடியால் ஒரு நகருக்கு மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டு, அனைத்துப் பணிகளுக்கும் பொறுப்பாளராக மாறினார். அங்ஙனமே ஆயர் என்ற பெயர் பெற்றனர். இவ்வாறு, வேதகலாபனை கால நெருக்கடியால் இவர்கள் ஆயர்களாக மாறினாலும் அப்போஸ்தலர்களிடமிருந்து இவர்கள் பதவிவந்ததால் அப்போஸ்தலர்களின் வாரிசுகளாகத் தங்களைக் கருத முடிந்தது.

இந்த ஆயர் பதவி யூதர்களின் செபக்கூடத் தலைவன் பதவியிலிருந்து வந்தது எனச் சிலர் சொல்லுவர். புறவினத்து மக்களின் வாழ்வில் (கிரேக்கர்) எப்பிஸ்கோப்போயி என்போர் கட்டடம், நாணயம் அச்சிடல் போன்றவற்றின் மேற்பார்வையாளராகவே இருந்தனர். ஆனால், கும்ரான் பகுதியில் வாழ்ந்த எசேனியர் ஆய்வாளர்களாகக் கொண்டிருந்தவர்களையும் மேற்பார்வையாளர் எனலாம்.

எப்படியும் துவக்கத்தில் தெளிவற்ற நிலையில் மூப்பர்களோடு சேர்த்து கருதப்பட்ட இப்பதவி பின்னால் தலத் திருச்சபையின் தலைமைப் பதவியாயிற்று. எப்பிஸ்கோப்போஸ் என்ற கிரேக்கச் சொல் ஆங்கிலத்தில் 'பிஷப்' என மாறுகிறது. தமிழில் அவரின் பணிகளை முன்னிட்டு ஆயர் என அழைக்கிறோம்.

6. திருப்பணியாளர் நியமனம்

பன்னிரு அப்போஸ்தலர்கள் இயேசுவால் நேரடியாகத் தேர்வு செய்யப்பட்டவர்கள். மற்ற அப்போஸ்தலர்களான சின்னப்பரும் மத்தியாசும்கூட இயேசுகிறிஸ்துவால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களே. சின்னப்பரை தமாஸ்கு செல்லும் வழியில் அழைத்தார். மத்தியாஸ் சீட்டுப்போட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆண்டவரே தேர்ந்தெடுத்ததைச் சுட்டிக்காட்டுகிறது (அப்.பணி 1:21-26).

7 திருத்தொண்டர்களைப் பொருத்தவரை முதல் அடி அப்போஸ்தலர்களால் எடுக்கப்பட்டது (அப்.பணி 6:1-6). அவர்கள் சகோதரர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அப்போஸ்தலர் வகுத்த நியதியின்படிதான் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ''நன்மதிப்புள்ளவர்களாய் தேவ ஆவியும், ஞானமும் நிரம்பப் பெற்ற எழுவரைத் தேர்ந்தெடுங்கள்'' என அப்போஸ்தலர்கள் கூறுகின்றனர் (அப்.பணி 6:3).

பர்னபாஸ், சின்னப்பர் ஆகியோர் மறைப்போதகர்களாய் ஆவியானவரால் அனுப்பப்படுகின்றனர் (அப்.பணி 13:1-3). எபேசுநகர் மூப்பரும் ஆவியானவரால்தான் கிறிஸ்துவர்களின் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் எனக்கூறப்பட்டுள்ளது (அப்,பணி 20:28). ஆயினும், ஆவியின் பிரதிநிதிகளாக அப்போஸ்தலர்களே செயல்பட்டிருக்கலாம் என்பது ஆய்வாளர் கணிப்பு. புனித சின்னப்பர் தீமோத்தேயுவையும் தீத்துவையும் தன்வாரிசுகளாய் தானே தேர்ந்தெடுக்கின்றார்.

ஆயர்களைப் பொறுத்தவரை அவர்கள் பணிசெய்ய வேண்டிய (தலத்) திருச்சபையாலும் தேர்வு செய்யப்பட்டனர்.

அதற்கு முன் ஆவியானவர் அவர்களைச் சோதித்தறிந்தார் என 1 தீமோ. 4:14 கூறுகிறது. ஆயினும், இறைவாக்குமூலம் உணர்த்தப்பட்டிருக்கலாம் என்பதும் இப்பகுதியில் தெரிகிறது.

7. திருப்பட்டமளிப்பு

திருப்பணியாளர் நியமனம் திருப்பட்டத்துடன் நடந்தது. இதில் அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் அல்லது ஆவியானவரின் பிரதிநிதிகளாகத்தான் செயல்பட்டனர். எனவே, கரங்களை தலைமேல் வைத்துத் திருப்பட்டங்கள் அளிக்கப்பட்டாலும் ஜெபம் முக்கிய இடத்தைப் பெற்றது.

ஆயர்களை மூப்பர்கள் அபிஷேகம் செய்தனர். ஆனால், பின்னாளில் பக்கத்து நகர ஆயர்கள் வந்து அபிஷேகம் செய்தனர்.

8. முடிவுரை

மேற்கண்ட நிலையில் திருச்சபையின் அமைப்புமுறை பல் வேறு பணியாளர்களைக்கொண்டு இயங்கியது, நற்செய்தி களின்றும் கடிதங்களின்றும் இந்த அமைப்புமுறையைத் தெளி வாக அறிந்துகொள்ள இயலாது. ஏனெனில், அவை வேறுவேறு இறையியல் நோக்கங்களுக்காக எழுதப்பட்டவை. அமைப்பு முறையைச் சுட்டிக்காட்டுவது அவற்றின் நோக்கமல்ல, ஆயினும், துவக்கக் காலத்தில் அமைப்புமுறை வலுவுள்ள ஒன்றாக விளங்கியது. ஏனெனில், திருச்சபை சிறு அளவில் துவங்கப்பட்டு பயணத் திருச்சபையாகவே முதலில் விளங்கியது.

அப்போஸ்தலர் காலத்திற்குப்பின் அமைப்பு முறை சிறிது வளர்ச்சியடைந்து தனித்தனிப் பணிகள் வரையறுக்கப்பட்டன. அதன் ஒளியில்தான் நாம் அப்போஸ்தலர் கால அமைப்பு முறை யைக்கூட அலசுகின்றோம்.

இருப்பினும், திருச்சபையின் அமைப்பு முறையைக் குறித்து மூன்று கருத்துக்கள் கூறலாம்.

1. திருச்சபையின் உறுப்பினர்கள் செயல்பாடுடைய விசு வாசிகள். அவர்கள் ஒவ்வொருவரும் வேறு வேறு பணிகளைச் செய்தனர்,

2. கடவுளே திருச்சபைக்குப் பணியாளர்களைக் கொடுத் தார். முக்கியமாய் அப்போஸ்தலர்களை ஆண்டவரே கொடுத் தார்.

3. இறைபணியாளரின் முக்கியபணி இறைவார்த்தையை எடுத்துரைப்பதே!

5

துவக்கத் திருச்சபை வரலாறு

இதுகாறும் திருச்சபையின் தன்மை மற்றும் அதன் அமைப்புமுறைபற்றி கண்டோம். விவிலியத்தின் பல பகுதி களைப் புரிந்துகொள்ள அவை ஓரளவு துணைசெயயும் என்ப தில் ஐயப்பாடு இல்லை. எனினும் துவக்கத் திருச்சபையின் வளர்ச்சியைச் சரித்திரப் பூர்வமாகச் சுருக்கமான முறையில் காண்பது நலம் பயக்கும்.

துவக்கத் திருச்சபையை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1) கி.பி. 30-100 அப்போஸ்தலர் காலம்

2) கி.பி. 100-150 உப அப்போஸ்தலர் காலம்

3) கி.பி. 150-313 உரோமைப் பேரரசுடன் மோதல் மற்றும் தப்பறைகள்

4) கி.பி. 313-590 பழைய திருச்சபையின் வளர்ச்சி

இப்போது ஒவ்வொரு காலத்தையும் தனித்தனியாகக் காண்போம்.

1. அப்போஸ்தலர் காலம் (30-100)

14-37 திபேரியுஸ் மன்னன் காலம்

இயேசு திருச்சபையை நிறுவுதல். நற்செய்தி எருசலேம், யூதேயா, சமாரியாவெங்கும் பரவுதல் (அப்.பணி 1-12). சிலு வையில் அறையுண்டு உயிர்த்த இயேசு எருசலேமில் போதிக்கப் படல். நற்செய்திப்பணி; வேத கலாபனை (யூதர்களால்). முடியப்பர் கொல்லப்படல், சமாரியாவில் நற்செய்தி.

37-41 கலிகுலா மன்னன் காலம் -சின்னப்பரின் மனமாற்றம்

41-54 கிளாவுதியுஸ் மன்னன் காலம்

-கொர்னேலியுஸ் மனந்திரும்புதல் (அப்,பணி 10)

நற்செய்தி மண்ணுலகின் இறுதி எல்லைவரை அறிவிக்கப் படல் (அப். பணி 13-28). அந்தியோக்கியாவிலிருந்து மறைப்

போதகப் பணி, சின்னப்பர் கிறிஸ்தவ மதம் வெறும் சட்டம் சடங்குகளுக்குள் நின்றுவிடாமல் இருக்கப் பாடுபடுகிறார். யூதமயமாக்கலை எதிர்க்கிறார். புறவினத்தாரும் நேரடியாகக் கடவுளரசில் சேருதலை வற்புறுத்துகிறார்.

- உரோமைப் பேரரசின் பல நகரங்களை மனந்திருப்புகிறார்.
- முக்கிய திருமுகங்களை எழுதுகிறார்.

54-68 நீரோ மன்னன்

-கிறிஸ்தவர்களை முதன்முதலில் துன்புறுத்தியவன்.

உரோமைப் பேரரசு இதுகாறும் திருச்சபைக்குச் சாதகமாகவே இருந்து வந்தது. அகுஸ்துஸ் செசார் மற்றும் அவனது பின்காமிகள் காலத்தில் பேரரசில் அமைதியும் நாகரீகமும் நிலைத்தது. அது நற்செய்திப் போதிக்கப்பட ஏதுவான சூழ்நிலையை அமைத்தது. சட்டம் ஒழுங்கு நிலைபெற்றிருந்தது. முக்கிய நகரங்களுக்கிடையே வாணிபம் இருந்ததால் வியாபார வழித்தடங்கள் உருவாயின.

கிறிஸ்தவ பாரம்பரியத்தில் அரசுக்குக் கீழ்படிதல் பெரிதும் வலியுறுத்தப்பட்டு வந்தது. இயேசுவும் செசாருக்குரியதைச் செசாருக்குக் கொடுங்கள் எனச் சொல்லியிருந்தார் (மாற்கு 12: 17). புனித சின்னப்பரும் ஆளும் அதிகாரம் கொண்டவர்களுக்கு அடங்கியிருக்கப் படிப்பித்திருந்தார் (உரோமையர் 13:1). பிற்கால கிறிஸ்தவ எழுத்தாளர்களும் கிறிஸ்தவர்கள் அரசின் பிரமாணிக்கமுள்ள குடிமக்களாக விளங்க வேண்டும் என எழுதியே வந்தனர்.

ஆயினும் சிக்கல் உருவாகாமலில்லை. கிறிஸ்தவர்கள் பிரமாணிக்கமுள்ள குடிமக்கள்தான். ஆனால் இறுதி பிரமாணிக்கம் யாருக்கு என்பதில் சிக்கல். புனித இராயப்பர் இதில் அரசு அதிகாரிகளைப் பகைத்தார். மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதைவிட கடவுளுக்கல்லவா கீழ்ப்படியவேண்டும் என அவர் தெளிவாகச் சொன்னார் (அப்.பணி 5:29). இன்னும் பல முக்கிய விஷயங்களிலும் சிக்கல் ஏற்பட்டது. நீரோவின் காலத்தில் (54-68) தற்செயலாகக் கலாபனை ஏற்பட்டது. கி.பி. 64-இல் நீரோ என்னும் தகுதியற்ற மன்னன் தன் தவறுகளையும் ஆடம்பரங்களையும் மறைக்க கிறிஸ்தவர்களைப் பலி கடாவாகப் பயன்படுத்தினான். கிறிஸ்தவர்கள் நீரோவின் தோட்டத்தில் எரிக்கப்பட இழுத்துச் செல்லப்பட்டனர். இது ஒரு நீண்டகாலக் கலாபனையின் துவக்கமாயிற்று. அதன்மூலம் உரோமைப் பேரரசில் கிறிஸ்தவத்திற்கு அதிகாரப்பூர்வ இடமில்லை என்பது புலனாயிற்று.

கி.பி. 250 வரை வேதகலாபனைகள் பொதுவர்னலையே நீண்ட காலத்தவையோ அல்ல. கிறிஸ்தவத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு எதிராக அவ்வப்போது கலாபனை தோன்றி விரைவில் அடங்கியது.

68-69 கால்பா மன்னன்

69 ஒதோ, வித்தெல்லியுஸ் மன்னர்கள்

69-79 வெஸ்பாசியன் மன்னன்

—எருசலேம் அழிக்கப்பட்டது (70)

79-81 தீத்தூஸ் மன்னன்

81-96 தொமீசியின் எனும் மன்னன்

வேதகலாபனை நிகழ்த்தியவன்

புனித அருளப்பர் பாத்மோஸ் தீவுக்கு நாடு கடத்தப்பட்டார். கிறிஸ்தவர்கள் பெருமளவில் துன்புறுத்தப்பட்டனர்.

96-98 நெர்வெ மன்னன்

(புதிய ஏற்பாட்டு நூல்கள் முடிக்கப்பட்டன).

98-117 டிராஜன் மன்னன்

கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியவன். இவன் காலத்தில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப் பட்டாலும் அது ஒட்டுமொத்தமான நசுக்கல் அல்ல. பிளினி எனும் மாநிலத் தலைமை அதிகாரி டிராஜன் மன்னனுக்கு எழுதிய கடிதத்தில் தாம் கிறிஸ்தவர்களைத் தேடிப் பிடித்து துன்புறுத்தலை ஆதரிக்கவில்லை என எழுதுகிறார். அவர்கள் ஏதாவது குற்றச்சாட்டில் பிடிக்கப்பட்டால் விசாரித்து, குற்றம் செய்திருந்தால் தண்டிக்கலாம் என்பது அவர் கருத்து. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைப் பழித்து விட்டு பேரரசரின் சிலைக்குத் தூபம் காட்டினால் அவர்களை விட்டுவிடுவார்.

முதல் நூற்றாண்டில் இவ்வாறு கிறிஸ்தவத்திற்குச் சாதகமான நிலையும் பாதகமான நிலையும் இருந்தது. வேதகலாபனை துவங்கப்பட்டாலும் பெரிதாக இல்லை.

முதல் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலிருந்தே கிறிஸ்தவ மதம் கொஞ்சம் கொஞ்சமாக யூதத்தத்துவத்தினின்று தன்னை விடுவித்துக் கொள்ள ஆரம்பித்தது. கிறிஸ்தவத்தின் பெரும்பகுதி யூதமதத்தினின்று பெறப்பட்டதே. கிறிஸ்தவத்தின் பெரும் பகுதி பழைய ஏற்பாட்டில் உள்ளவை அல்லது பழைய ஏற்பாட்டில் வாக்களிக்கப்பட்டவை. கடவுள், படைப்பு, மனிதன், பாவம்,

பராமரிப்பு, தூய ஆவி, வெளிப்பாடு, தீர்ப்பு, இரக்கம், மீட்பு, வரலாறு, நம்பிக்கை இன்னும் இவை போன்ற எத்தனையோ அம்சங்கள் பழைய ஏற்பாட்டிலிருந்து கடன் வாங்கப்பட்டவை. பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் பிரிக்கும் நபர் மெசியா. ஆனால் அந்த மெசியா இரண்டுக்கும் பொதுவானவர். வித்தியாசம் என்பதெல்லாம் அவரின் காலத்தைப் பொருத்தது மட்டும்தான். கிறிஸ்தவர்கள் மெசியா வந்துவிட்டார் என்று கூறினர் (இயேசுவே மெசியா). யூதர்களோ அவர் இன்னும் வரவில்லை என்றனர்.

யூத மதத்தினின்று தன்னை கொஞ்சம் கொஞ்சமாகக் கிறிஸ்தவ மதம் பிரித்துக் கொள்ளவேண்டியதாயிற்று. எருசலேமின் அழிவிற்கு முன்னே (கி. பி. 70) அது துவங்கிவிட்டது. ஒரு குழந்தைபோல இருந்த கிறிஸ்தவத்திற்குத் தன் காலில் நிற்பதைத் தவிர வேறு வழியில்லை. உரோமைப் பேரரசின் எல்லைக்குட்பட்டு, பல்வேறு மதங்களின் நடுவில் இருந்த அது தன் நிலையைத் தெளிவாக உணர்த்த வேண்டியதாயிற்று.

இதில் அதற்கு இரண்டு போக்குகள் தேவைப்பட்டன. ஒன்று உலகம் மற்றும் குறிப்பாக உரோமைப் பேரரசோடு உள்ள உறவின் பாதை. இரண்டாவது கிறிஸ்து வழியாகத் தனக்குக் கொடுக்கப்பட்ட வெளிப்பாட்டின் உண்மையை ஆய்ந்து தெளிவு செய்வது.

முதல் போக்கில் போட்டி மதங்கள் மற்றும் கலாபனைகளுக்கெதிரான போராட்டம் இருந்தது.

இரண்டாவதில் தப்பறைக் கொள்கைகளுக்கெதிரான போராட்டம் இருந்தது.

2. உப அப்போஸ்தலர் காலம் (100-150)

117-138 அட்ரியன் மன்னன்

— அப்போஸ்தலத் திருமறைத் தந்தையர்.

புனித கிளமெந்து (உரோமை ஆயர்)

— புனித இஞ்ஞாசியார் (அந்தியோக்கு ஆயர்)

இவர் வேதசாட்சியாக மரணம் அடைந்தார்.

— பப்பியாஸ் (ஹியராப்போலிஸ் ஆயர்)

— புனித பொலிக்கார்ப்பு (சிமிர்னா ஆயர்)

இவரும் வேதசாட்சியாக மரணம் அடைந்தார்.

138-161 — அந்தோனியுஸ் பியூஸ் மன்னன்
— இவனும் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினான்.

இக்காலத்தில் சில எழுத்துப் படையல்கள் எழுந்தன. அவை ஏற்றுக்கொள்ளப்படா கடிதங்களாய் இருப்பினும் ஓரளவு நம்பத்தகுந்தவை.

(1) புனித கிளமெந்து கொரிந்தியருக்கு எழுதிய திருமுகங்கள்

இவற்றில் முதல் திருமுகம் கொரிந்து சபையில் ஏற்பட்ட ஒரு நெருக்கடியைக் குறித்து உரோமைத் திருச்சபை கொண்ட கரிசனையை விளக்குகிறது. கொரிந்து சபையில் இளையவர்கள் தலைமைப் பொறுப்பிலிருந்து முதியவர்களை நீக்கியதால் பிரச்சனை எழுந்தது. இச்சூழ்நிலையை வைத்து புனித கிளமெந்து கிறிஸ்தவ நற்புண்ணியங்களான விசுவாசம், இரக்கம், தாழ்ச்சி, தன் மறுப்பு, விருந்தோம்பல் முதலானவற்றைப் போதிக்கிறார்.

இரண்டாம் திருமுகம் ஒரு மறையுரையாக உள்ளது. இசையால் 54-ஆம் அதிகாரத்தை வைத்து புறவினத்திலிருந்து புதிதாய் மதம் மாறி கிறிஸ்தவத்திற்கு வந்தோர்க்குப் போதித்தார்.

(2) புனித பர்னபாசின் திருமுகம்

இத்திருமுகம் மோயீசனின் சட்டமின்றி கிறிஸ்துவின் மரணம் மட்டுமே நமது மீட்புக்குப் போதுமானது என விளக்குகிறது.

(3) டிடாக்கே (பன்னிரு அப்போஸ்தலர் படிப்பினை)

இதில் அலக்சாந்திரியா கிளமெந்து, பர்னபாசு போன்ற பலரின் திருமுகங்கள் உள்ளன. புதிய கிறிஸ்தவர்க்கு மறைக் கல்விப் புத்தகமாக எழுதப்பட்டது. யூத மறைப்போதக முறைப்படியான 'இருவழிகள்' பற்றி அழகாக விவரிக்கிறது.

புனித எவுசேபியுஸ் 4-ஆம் நூற்றாண்டில் குறிப்பிட்டு உள்ள இந்நூல் மறைந்து, பின் 1873-இல் கண்டெடுக்கப்பட்டு உள்ளது.

(4) ஹெர்மாசின் மேய்ப்பன்

இது காட்சியாகமப் புத்தகம். பொறுப்பு மற்றும் மனம் வருந்துதல் பற்றி விவரிக்கிறது.

உப அப்போஸ்தலர் காலத்தில் எழும்பிய இந்நூல்களில் சில வகை திருத்தொகையில் உள்ளன. ஆயினும் திருச்சபை அவற்றை அங்கீகரிக்கவில்லை. எனினும் அவற்றில் அரிய கருத்துகள் உள்ளதாக அவையும் படிக்கப்படுகின்றன.

உப அப்போஸ்தலர் காலம் வேத கலாபனையைக் கண்டது. ஆயினும் இன்னும் அது பெருமளவில் பரவவில்லை.

5. உரோமைப் பேரரசுடன் மோதல் மற்றும் தப்பறைக் கொள்கைகள் (150-313)

இக்கால உரோமைப் பேரரசர்கள்

(1) மார்குஸ் அவுரேலியுஸ் (161-180)

கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினான். ஜஸ்டின் எனும் வேதசாட்சி, புனித பொலிகார்ப்பு என்பவர்கள் இவன் காலத்தில் கொல்லப்பட்டனர்.

(2) கொம்மோதுஸ் மன்னன் (180-192)

(3) செப்திமுஸ் செவேருஸ் (193-211)

ஆங்காங்கே கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டனர். பலர் அலக்சாந்திரியா, எகிப்து, வட ஆப்பிரிக்கா, பகுதிகளில் கொல்லப்பட்டனர். கிறிஸ்தவர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர். தலை வெட்டப்பட்டனர். உயிரோடு எரிக்கப்பட்டனர். கொடிய விலங்குகளுக்கு முன்னால் போடப்பட்டு கொல்லப்பட்டனர்.

(4) காரக்கல்லா 211-217)

(5) எலாகபாலுஸ் (218-222)

(6) அலக்சாந்தர் செவேருஸ் (222-235)

இவர்கள் யாவரும் கிறிஸ்தவர்களைச் சகித்துக் கொண்டனர்; துன்புறுத்தவில்லை.

(7) மாக்சிமின் [235-238]

பல முக்கியக் கிறிஸ்தவத் தலைவர்களைக் கொன்றான். ஓரிஜன் எப்படியோ தப்பிவிட்டார்.

(8) கோர்டியன் [238-244]

(9) பிலிப்பு [244-249]

இவர்கள் இருவரும் கிறிஸ்தவர்களை ஆதரித்தனர்.

(10) தேசியுஸ் [249-251]

இவன் கொடியதும், பேரரசு முழுவதற்குமான கலாபனையை கி பி. 250-க்குப் பின் ஆரம்பித்தான். கணக்கற்ற கிறிஸ்தவர்கள் பேரரசு முழுவதும் கொல்லப்பட்டனர்.

(11) வலேரியன் [253-260]

கடுமையான வேத கலாபனை நிகழ்த்தினான். புனித சிப்ரியான் என்பவர் இவன் காலத்தில் கொல்லப்பட்டார்.

(12) டையோகிளேசியன் [284-305]

இவன் கிறிஸ்தவத்தை அடியோடு ஒழிக்க முயற்சித்தான். திருச்சபை வரலாற்றிலேயே அதுவரை இல்லாத பெரும் வேத கலாபனைகளைத் துவக்கி வைத்தான்.

சில தப்பறைக் கொள்கைகள் [150-313]

(1) அறிவுத்திறன் கொள்கை (gnosticism)

அடிப்படையில் பொருள் தீமையானது. இயேசுவுக்கு உண்மையான உடல் இருக்க இயலாது எனும் கொள்கை. தீமையான உடலில் சிறை வைக்கப்பட்டுள்ள ஆன்மா அறிவின் மூலமே விடுதலையடைய இயலும் எனும் கொள்கை இது.

தப்பறையான இந்தக் கொள்கை கிறிஸ்தவ மதத்திற்கு ஆபத்தைத் தரவந்தது. அனைத்தையும் அறிவு சார்ந்த முறையில் மாற்றி கிறிஸ்தவ மதத்தின் நடுநாயகமான செய்தியை இது இருட்டடிப்பு செய்திருக்கும்.

இக்கொள்கை புதிய ஏற்பாட்டிலும் புகுந்தது. அருளப்பர் நற்செய்தியிலும் புனித சின்னப்பர் கடிதங்களிலும் இக்கொள்கை சார்ந்த மொழிகள் உள்ளன. சின்னப்பர் கூறும் ஊனுடல், ஆவி இரண்டிற்குமுள்ள வேறுபாடு (உரோ. 8:4-5), மற்றும் அருளப்பர் நற்செய்தியில் வரும் கிறிஸ்து முன்னரே வாழ்கிறார் (175) என்பவை அறிவுத்திறன் கோட்பாட்டினரால் பயன்படுத்தப்பட்டன.

(2) நெயோபிளட்டோனிஸம்

தெய்வீகத் தன்மையின் துகள் ஒன்று எங்கும் பரவி பல் வேறு மதங்களில் வழிபடும் பொருட்களில் ஊடாடி நின்று இயக்குகிறது. ஆனால், கிறிஸ்தவத்திற்கு அத்தன்மை இல்லை எனும் கொள்கையாகும் இது.

(3) மொந்தானிஸம்

மொந்தானுஸ் என்பவர் மனிதர் ஏற்படுத்திய அமைப் பாகிய திருச்சபையில் அதிக நம்பிக்கை வைப்பதை எதிர்த்தார். அவர் தனக்குப் பரிசுத்த ஆவியின் நேரடி வெளிப்பாடு இருக் கிறது எனக் கூறி கிறிஸ்து உடனே வரப்போவதாய் வலியுறுத் தினார்.

(4) மொனார்க்கியனிஸம்

இக்கொள்கை கடவுள் ஒருவரே என வலியுறுத்தி அவர் மூவகை ஆட்களாய் இருப்பதை மறுத்தது.

தப்பறைக் கொள்கைகளுக்கு எதிர்வாதங்கள்

(1) இரனேயுஸ்

இவர் அறிவுத்திறன் கொள்கைக்கு எதிராக எழுதி கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மை மற்றும் அவரின் உயிர்ப்பு ஆகியவற்றை நிலை நிறுத்தினார்.

(2) ஒரிகன்

இவர் 'தே பிரின்சீபிஸ்' எனும் நூல் எழுதி முதன் முதலான ஒழுங்கு பூர்வமான இறையியல் ஏற்படுத்தினார். இவர் ஹெக்சப்ளா எனும் படைப்பை உருவாக்கி பழைய ஏற்பாட்டு மூலம் மற்றும் கிரேக்க மொழிபெயர்ப்புக்களை அருகருகே எழுதி பாட விமர்சனத்தை முதன் முதலில் செய்தார்.

(3) தெர்துல்லியன்

இவர் கடவுளின் மூவகை ஆள் தன்மையையும் வலியுறுத் தினார்.

(4) சிப்ரியான்

இவர் புனித இராயப்பரின் முதன்மைத் தன்மையையும் அப்போஸ்தலிக்க வாரிசு தன்மையையும் வலியுறுத்தினார்.

(5) **வேதசாட்சி ஜஸ்டின்**

இவர் கிறிஸ்தவத்தின் ஆன்மீக, நல்லொழுக்க மதிப்பீடுகளை எழுதி அது உரோமைப் பேரரசில் சட்டபூர்வமான மதமாக்கப்பட வேண்டும் என வேண்டினார்.

இக்காலத்தில் (150-313)

திருச்சபையின் வளர்ச்சி

1. திருச்சபையின் பல இடங்களிலும் கலாபனை ஏற்பட்டதாலும் தப்பறைக் கொள்கைகள் பரவியதாலும் உரோமையிலுள்ள ஆயர் அகிலத் திருச்சபைக்கும் தலைமைப் பொறுப்பு பெற்றவர் எனும் எண்ணம் உருப்பெற்றது.

2. புதிய ஏற்பாட்டின் திருத்தொகை தெளிவாகியது (கி.பி. 200-இல்).

3. திருச்சபையின் காலண்டர் உருவானது. கிறிஸ்து பிறப்பும் உயிர்ப்புத் திருநாளும் முக்கிய திருநாட்களாயின.

4. அப்போஸ்தலர்களின் விசுவாசப் பரிமாணத்தின் துவக்கப் படிவம் உருவானது.

கலாபனை

இக்காலக்கட்ட கலாபனைக்குக் காரணம் தனது மதமாக விளங்கும் கிறிஸ்தவ மதம் உரோமைப் பேரரசுக்குப் பாதகமாக அமையும் எனும் எண்ணமே. கிறிஸ்தவர்கள் வேதகலாபனைக்கு அஞ்சி பூமிக்கடியில் அறைகளில் வாழ்ந்தனர். உரோமையில் இப்படிப் பல அறைகள் உள்ள பகுதிகள் உள்ளன. அவற்றிலுள்ள சில எழுத்தோவியங்கள் அக்கால நிலையைச் சுட்டிக் காட்டுகின்றன.

ஆயினும், வேதகலாபனைகள் (250 முதல் 311 வரையுள்ளவை) கிறிஸ்தவ மதத்தை அழிப்பதற்குப் பதில் அதன் இமாலாய வளர்ச்சியைத்தான் கண்டன.

4. அரச திருச்சபையின் உதயமும் வளர்ச்சியும் (313-590)

1. அரசியல் நிலவரம்

மன்னன் கான்ஸ்தாந்தின் (306-337) போர் ஒன்றில் சிலுவையினால் வெற்றி கிடைத்ததால் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினான் (312).

கி.பி. 313-இல் மிலான் ஆணையை வெளியிட்டான். ஞாயிற்றுக் கிழமையை ஓய்வு நாளாகவும் வழிபாட்டு நாளாகவும் அறிவித்தான் (321). கிறிஸ்தவ மதத்தை அரசாங்க மதமாக்கினான். தேவாலயங்கள் கட்டுவதை ஊக்குவித்தான். தனது தலைநகரை கான்ஸ்தாந்தி நோப்பிளுக்கு (பைசாந்தியும்) மாற்றினான். அடிமைத்தனம் போன்ற பல புறவினத்து வழக்கங்களை நன்முறைப்படுத்தினான். இதன்பின் திருச்சபை வேதகலாபனையால் தூய்மை பெறாத பட்சத்தில் உலகியல் சிந்தனைகளால் மாசுபட்டது. திருச்சபையின் வளமையே அதற்கு ஆபத்தானது. புறவினத்து மதத்தினின்று தன்னை விடுப்பதற்குப் பதில் கிறிஸ்தவ மதம் பலவழிகளில் தன்னை அதனோடு கலக்கச் செய்தது.

337-361 கான்ஸ்தாந்தினின் மூன்று மகன்கள் பேரரசை ஆண்டனர்.

361-363 ஜூலியன் எனும் அவிசுவாசியான மன்னன் சிறிது காலம் திருச்சபையைத் துன்புறுத்தினான்.

363-364 ஜோவியன் கிறிஸ்தவ விசுவாசத்தை மீண்டும் நிலைநிறுத்தினான்.

379-395 **பெரிய தியோதோசியுஸ்**

இவன் புறவினத்து மதத்தைப் பேரரசில் தடைசெய்து கிறிஸ்தவ மதத்தை அரசாங்க மதமாக்கினான் (380). இங்ஙனம் நான்காம் ஐந்தாம் நூற்றாண்டுகளின் அரச திருச்சபை ஒரு பயணத் திருச்சபை எனும் தன்மையிலிருந்து மாறி அமைப்புத் திருச்சபையாயிற்று.

2. மிலேச்சர் மனமாற்றம்

ஐரோப்பாவின் மிலேச்சர்கள் படையெடுத்து உரோமைப் பேரரசை முறியடித்தனர். சிலர் பெயரளவில் கிறிஸ்தவர்களாய் மாறினர். அது திருச்சபைக்குத் தீமையையே தந்தது. ஏனெனில் பல புறவினத்து மதப் பழக்கங்கள் திருச்சபையில் புகுத்தப்பட்டன.

பிரிட்டன் மக்கள் உரோமைக் கிறிஸ்தவர்களால் மனந்திருப்பப்பட்டனர். புனித பத்ரீசியார் அயர்லாந்தை மனந்திருப்பினார். ஸ்காட்லாந்து மக்கள் கொலும்பா எனும் புனிதரால் மனந்திரும்பினர்.

3. திருமறைத் தந்தையர்

1. கிழக்கத்திய திருமறைத் தந்தையர்

புனித பொன்வாய் அருளப்பர் (345-407) கான்ஸ்தாந்தி நோப்பிளில் ஆயராக இருந்தார். பெரிய மறையுரையாளராக விளங்கினார்.

மோப்சுயெஸ்தியா ஆயர் தியோடோர் விவிலியத்திற்கு ஆழ்ந்த இலக்கணபூர்வமான மற்றும் வரலாற்று விமர்சன விளக்கமளித்தார்.

செசரையாவின் எவுசேபிவுஸ் (264-340) திருச்சபை வரலாற்றின் தந்தை எனப்படுபவர். இவர் திருச்சபையின் அக் காலம் (323) வரையிலான செல்வங்களை (அறிவு) வறையறுத்து வைத்தார்.

2. மேற்கத்திய திருமறைத் தந்தையர்

புனித ஏரோணிமுஸ் (340-420) என்பவர் விவிலியத்தை இலத்தீனில் மொழிபெயர்த்தார் (உல்காத்தா). இது இந்த நூற் றாண்டு வரை பிரபல்யமானது. நமது தமிழ் மொழியில் இருக்கும் பழைய ஏற்பாடு இந்த வுல்காத்தாவிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டதே. இப்போதுதான் பிரிந்த சபையினரோடு சேர்ந்து எபிரேயத்திலிருந்து பழைய ஏற்பாடு தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு முடிவுறும் தருவாயிலிருக்கிறது.

புனித அகுஸ்தினார் (354-430) புகழ் வாய்ந்த இறையியல் வல்லுநர். அவர் எழுதிய கடவுளின் நகரம் (City of God) எனும் நூல் எதிர்காலத்தில் ஏற்படும் உலகளாவிய கிறிஸ்தவ பேரரசைப் பற்றிக் கூறியது.

4. இக்கால விசுவாச மோதல்கள் 325-451)

1, கிறிஸ்துவின் ஆள்தன்மை

ஆரியுஸ் என்பவர், கிறிஸ்து ஒரு படைப்புயிர் என்றும், அவர் கடவுளிமிருந்து வேறுபட்டவர் என்றும் போதித்தார்.

ஆனால் அத்தானாசியுஸ் என்பவர் கிறிஸ்து கடவுளோடு இருப்பவர், தந்தைக் கடவுளின் அதே தன்மை கொண்டுள் ளவர்; இவர் நித்தியமானவர் என வாதிட்டார்.

நீசேன் திருச்சங்கம் (325) ஆரியுஸின் தப்பறைக் கொள் கையைக் கண்டித்தது. அத்தனாசியுஸ் கூற்றை ஏற்றுக் கொண்டது.

அப்பொலினாரிஸ் என்பவரின் கருத்து, கிறிஸ்துவின் மனித ஆவியை 'லோகோஸ்' மாற்றி வைத்தது என்பதாம். இதைக் கான்ஸ்தாந்திநோப்பிள் திருச்சங்கம் கண்டித்தது.

நெஸ்டோரியஸ் என்பவர் கிறிஸ்துவின் மனித இயல்பையும் தெய்வீக இயல்பையும் பிரித்து மனித இயல்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். இதை எபேசு திருச்சங்கம் (431) கண்டித்தது.

கால்சிடோன் திருச்சங்கம் ஏற்கெனவே சொல்லப்பட்ட கிறிஸ்துவின் இரு இயல்புகளும் அவரின் ஆள்தன்மையில் ஒன்றாக விளங்குகின்றன எனும் கொள்கையை வலியுறுத்தியது.

2. இறையருளும் மனித சுதந்திரமும்

புனித அகுஸ்தினார் மனிதனின் பாவநிலையை அதிகம் வலியுறுத்தி அவன் மீட்கப்பட முழுக்க முழுக்க இறையருளையே நம்பியுள்ளான் என வாதிட்டார். ஆனால், பெலாசியுஸ் இக் கொள்கையை எதிர்த்து மனிதர் இறையருளுடன் சேர்ந்து செயல்பட இயலும் என்றார்.

5. பாப்பரசர் பதவியின் நிலை

பாப்பரசர் என்ற சொல் பாப்பா என்ற இத்தாலிய நாட்டுச் சொல்லிலிருந்து வருவது. அதற்குத் தந்தை என்றே பொருள். முதலில் அது எல்லா மேற்கத்திய ஆயர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தது. ஆனால், கி.பி. 500-க்குப் பிறகு உரோமை ஆயருக்கு மட்டும் அது வழங்கப்பட்டது. பின்னர் அது உலகளாவிய திருச்சபையின் தலைவர் என்ற நிலையில் பொருள் பெற்றது. இது புனித இராயப்பரின் முதன்மை மற்றும் அப்போஸ்தலிக்க வாரிசுத் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் எழுந்ததாகும்.

முதலாம் சிங்கராயர் (440-461) எனும் பாப்பரசர் எல்லா ஆயர்களின் தலைமை ஆயர் எனும் பதவியை மூன்றாம் வலன்டீனியன் (445) எனும் பேரரசனிடமிருந்து பெற்றார்.

மேற்கத்திய பேரரசு 476-இல் வீழ்ச்சியுற்றபின் மற்ற அரசுகளுடன் பாப்பரசர்கள் ஒப்பந்தங்கள் செய்துகொண்டனர்.

சிம்பிலியுஸ் (468-483) காலத்திலிருந்து இரண்டாம் பெலாசியுஸ் (578-590) காலம் வரை பாப்பரசரின் அதிகாரம் வளர்ச்சியடைந்தது.

6. துறவியர் மடங்கள்

இவை முதலில் எகிப்தில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் பேரரசெங்கும் பரவின. துறவியரின் முக்கிய நோக்கு உலகிலிருந்து ஒதுங்கி வாழ்ந்து புனிதத் தன்மையில் நிலைத்திருப்பது. ஐரோப்பிய துறவற மடங்கள் திருச்சபையின் மத்திய காலத்தில் கல்வி, ஆராய்ச்சிப் படிப்பு, இலக்கியம் மற்றும் விவசாயத்திற்கென தங்களையே அர்ப்பணித்துக் கொண்டன,

இங்ஙனம் திருச்சபை பெரும் மாற்றங்களைத் தன் துவக்க காலத்தின் இறுதிக்குள் பெறலாயிற்று. பயணத் திருச்சபை அமைப்புத் திருச்சபையாக மாறிவிட்டதால் நன்மையும் தீமையும் புகுந்து கொண்டன.

முடிவுரை

திருச்சபையின் துவக்க கால வரலாற்றைச் சுருக்கமாக இங்குப் பார்த்தோம். விவிலியம் எழுந்த சூழ்நிலை திருச்சபைச் சூழ்நிலைதான். திருச்சபையின் விசுவாச நம்பிக்கை அமைப்புச் சூழ்நிலையில்தான் விவிலியம் எழுந்தது. ஆவியானவரால் ஏவப்பட்ட நூலாயினும் அதைத் திருச்சபைதான் அங்கீகரித்தது. எனவே திருச்சபையின் சரித்திரத்தை அறிவது விவிலியத்தை நன்கு அறிந்து கொள்ளத் துணை செய்கின்றது. அதோடு விவிலியத்திற்குத் திருச்சபை அளிக்கும் விளக்கமும் திருச்சபையின் அனுபவங்களையும் நம்பிக்கைகளையும் பொறுத்தே அமையும் என்பதால் திருச்சபை வரலாறு நமக்குத் தேவையானது.

விவிலியத்தைப் பொறுத்தவரை துவக்க வரலாறு மிக முக்கியம் என்பதால் அதை மட்டும் இங்குப் பார்த்துள்ளோம். ஆயினும் அதற்குப் பிந்தைய கால வரலாறும் விவிலியத்தை நன்கு அறிய அதன் விளக்கங்களைப் புரிய துணை செய்யும்.

590-லிருந்து 1517 வரையிலான காலத்தை திருச்சபையின் மத்திய காலம் என்கிறோம். இக்காலத்தில் கிறிஸ்தவ மதம் வளர்ந்தாலும் பல சோதனைகளும் பின்னடைவுகளும் இருக்கவே செய்தன. 570-ல் தோன்றி முகமது நபி கொணர்ந்த இஸ்லாமிய மதம் வேகமாய்ப் பரவி மேற்கு ஆசியா, வட ஆப்பிரிக்கா, எருசலேம் யாவற்றையும் ஆக்கிரமித்து. பாப்பரசர்களின் பொற்காலம் என 1054-முதல் 1305 வரையிலான காலத்தைச் சொன்னாலும் பாப்பரசர் பதவி இழிவுபடுத்தப்பட்டதும் மத்திய காலத்தில்தான். இஸ்லாமியரிடமிருந்து பாலஸ்தீனாவை மீட்க 7 சிலு

வைப்போர்கள் மத்தியகாலத்தில் செய்யப்பட்டன- ஆயினும் அவை முழு வெற்றியளிக்கவில்லை.

1517-லிருந்து இன்றுவரையுள்ள காலத்தை நவீன காலம் என்கிறோம். திருச்சபையில் மறுமலர்ச்சி தோன்றியது. பிரிந்த சபையினர் லூத்தர் முயற்சியால் உருவாயினர் (1483-1546). கத்.திருச்சபை புரட்டஸ்டாண்டு பிரிவினைக்கு எதிர்வாதம் செய்தது. திரிதெந்தீன் சங்கம் 1546-ல் நடத்தப்பட்டது. கத். திருச்சபை தன் கொள்கைகள் பலவற்றை அறுதியிட்டு அறிவித்தது. விவிலியப் புத்தகங்கள் 73 எனத் தெளிவாக்கியது. சென்ற நூற்றாண்டில் முதலாம் வத்திக்கான் சங்கம் துவங்கப்பட்டு போர் காரணமாய் சீக்கிரம் கலைந்து விட்டது.

1962-முதல் 1965 வரை இரண்டாம் வத்திக்கான் சங்கம் நடத்தப்பட்டு திருச்சபையில் பெரும் மறுமலர்ச்சிகள் புகுத்தப் பட்டுள்ளன. முக்கிமாக பிரிந்த சபையினருடனும் வேறு மதத் தினருட்னும் உரையாடல் நடக்கிறது.

பல்வேறு மறுமலர்ச்சிகளில் தூய ஆவி இயக்கமும், விடுதலை இறையியல் இயக்கமும் எண்ணத்தக்கன. விவிலியத் திற்கு சமுதாய வழிநின்று விளக்கமளிக்கும் முறை பரவி வருகின்றது. பல்லாண்டு சரித்திரம் கொண்ட திருச்சபையில் பல்லாண்டு சரித்திரம் கொண்ட விவிலியம் பீடுநடை போட்டு வருகிறது. அதனை நிகழ்காலத்தில் அதிகம் படிக்கவும், உண்மை பொருளை ஆய்ந்துணரவும் அனைவரையும் ஊக்குவிக்கும் முயற்சியை திருச்சபை இன்று அதிகமாகச் செய்கிறது. இடைக் காலத்தில் மறுக்கப்பட்ட விவிலியத்தை மீண்டும் இறை மக்களின் வாழ்வாக மாற்ற திருச்சபை அருமுயற்சி எடுக்கிறது என்பதில் ஐயமில்லை.

பல இடரான கால கட்டங்களைத் தாண்டி வந்துள்ள திருச்சபை இன்று மறுமலர்ச்சியின் பாதையில் செல்கிறது என்பதில் ஐயமில்லை. அதற்கு விவிலியம் இன்று பெருமளவில் துணை நிற்கிறது என்பது மிகையல்ல.

கேள்விகள்

1. திருச்சபைபற்றி விவிலியம் கூறும் கருத்துக்களைச் சுருக்க மாகத் தொகுத்து வரைக (அதிகாரம் II).

2. யூதக் கிறிஸ்தவர் புறவினத்துக் கிறிஸ்தவர் நிலை பற்றி வரைந்து இக்காலத் திருச்சபையின் அத்தகு சூழ்நிலையோடு பொருத்துக (அதிகாரம் III).

3. திருச்சபையின் அன்றைய பணியாளர் குறித்து சிறு குறிப்பு வரைக (அதிகாரம் IV — அப்போஸ்தலர் ..... ஆயர்).

4. அப்போஸ்தலர் காலத் திருச்சபைக்கும் (30-100) பின்னைய காலத்திருச்சபைக்கும் உள்ள வேறுபாடு யாது?

அதிகாரம் V).

(ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு பக்கத்திற்கு மிகாமல் பதில் தருக).

புனித சின்னப்பர் விவிலிய நிலையம்
பூந்தமல்லி, சென்னை -600 056
போன்: (044) 572 395
15-10-1991.

அன்புடையீர்,

எமது நிலையத்தின் அஞ்சல் வழிக் கல்வியின் (அருள் வாக்கு அறிவோம்) 22-வது நூலாக **துவக்கத் திருச்சபை: ஒரு கண்ணோட்டம்** எனும் இந்நூல் வெளி வருகிறது. மொத்தம் நூறு நூல்கள் வெளியிடுவதே எம் பாடத்திட்டம். பழைய ஏற்பாட்டில் ஒரு பாகத்தில் 10 நூற்களும், புதிய ஏற்பாட்டில் ஒரு பாகத்தில் 10 நூற்களும் இதுவரை வெளிவந்துள்ளன. இப்போது புதிய ஏற்பாட்டில் பாகம் II-இல் 2-வது நூலாக இது வெளிவருகிறது.

இதற்குமுன் அனுப்பிய புதிய ஏற்பாட்டுப் பின்னணி என்ற நூலுக்கான கேள்விகளுக்குப் பலர் பதில் அனுப்பிக் கொண்டிருக்கிறீர்கள். இன்னும் அனுப்பாதவர்கள் விரைவில் அனுப்புக. ஒவ்வொரு கேள்விக்கும் அரைப்பக்கம் பதில் எழுதுவது சிரமம் எனச் சிலர் எழுதியுள்ளீர்கள். இந் 5 நூலுக்கான கேள்விகளுக்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு பக்கத்திற்கு மிகாமல் பதில் எழுதுங்கள்.

இந்தப் புதிய ஏற்பாடு பாகம் II-இல் சேர்ந்தவர்க்குப் புதிய எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைத் தவறாமல் உங்கள் கடிதத் தொடர்பில் குறிப்பிடுங்கள்.

நன்றி.

இறைவார்த்தையில் உங்கள் அன்புள்ள

அருள்திரு. வி. இரபேல்

இயக்குநர்.